Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

# Restaurant Tilko



10% Disscount

மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)

(Fully Air Condationed)

TILKO

Tilko Jaffna City Hotel


Tel : 021 222 5969, Fax:021 222 7291

Wdb:www.cityhoteljaffna.com

e-mail : info@cityhoteljaffna.com

(C/1501)

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | வைகாசி 15 திங்கட்கிழமை (28.05.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 240



நியூட்டனின் புதிருக்கு தீர்வு
(17)



தமிழ் மக்களுக்கு புதிய தலைமை
(08)



சிட்டியும் சுட்டியும்
(18)



இழந்த காணியை பெற சட்டம்
(09)



குடிசைக் கைத் தொழில்களின் வளர்ச்சி
(04)

# ஐ.நா. மனித உரிமைக் குழு இலங்கை வருவதற்கு தடை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் குழுவை இலங்கைக்கு வர அனுமதிப்பதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கடந்த மார்ச் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அரசாங்கத்துக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது குறித்து ஆராயும் முகமாக இலங்கைக்கு ஒரு குழுவை அனுப்ப ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த 14 ஆம் திகதி இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு கடிதமொன்று அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்தில் ஜெனிவாத் தீர்மானத்தின்படி மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது குறித்து ஆராயும் குழு எதிர்வரும் ஜுலை மாதம் பயணம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜெனிவாத் தீர்மானத்தை நிராகரித்துள்ள அரசாங்கம், இக்குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பதில்லை என முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜெனிவாத் தீர்மானத்தின்படி ஐ.நா. வின் எந்தவொரு அதிகாரிகளோ அல்லது குழுவினரதோ விஜயத்தையும் அரசாங்கம் வரவேற்காது என அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வரவேண்டுமாயின் அரசாங்கத்தின் அனுமதியை பெற்ற பின்னர் மாத்திரமே வரமுடியும் என வெளிவிவகாரத் துறை (19) ஆம் பக்கம் பார்க்க

## நகைகள் அபகரிப்பு மூதாட்டியும் கொலை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் திருடச்சென்ற திருடர்கள் அங்கிருந்த நகைகளை அபகரித்ததுடன் அங்கு தனித்திருந்த மூதாட்டியை தலையணையால் நசித்து கொலைசெய்துள்ள சம்பவம் அச்சுவேலி, இராசவீதி தோப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு அன்னம்மா (வயது - 72) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்,03)

## பரிந்துரைகள் விடயத்தில் துரிதமான செயற்பாடு

### மீளவும் வலியுறுத்தும் அமெரிக்கா



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் துரிதமாகச் செயற்பட வேண்டுமென அமெரிக்கா மீளவும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச்செயலர் மைக்கல் போஸ்னர், கொழும்பு கசெற் ஊடகத்துக்கு வழங்கியுள்ள முகநூல் வழி செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கில் படைக்குறைப்பிலும் கூட அமெரிக்கா குறிப்பிடத்தக்க ஆர்வம் காட்டியுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒரு தொகையான பரிந்துரைகள் (19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலையின் ஏனைய பீடங்களும் கிளிநொச்சிக்கு மாற்றுவதற்கு திட்டம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)





கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற இடவசதி மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தி என்பவற்றை நோக்காகக் கொண்டு யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுடன் ஏனைய பீடங்களையும் கிளிநொச்சிக்கு மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றைய தினம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்டத்தின் 2010/2011 கல்வியாண்டுக்கான பல்கலைகழக புகுமுக மாணவர்கள் 88 பேருக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவா அங்கு மேலும் தெரிவிக்கையில், (19) ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவில் பகுதியில் கடத்தப்பட்டார் யுவதி

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் யுவதி ஒருவர் இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார்.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த செல்வராசா அர்ச்சனாம்பிகா (வயது - 23) என்ற யுவதியே கடத்தப்பட்டவராவார்.

தனது தந்தையாருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை (19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் றிசாட்டிற்கு எதிராக மன்னாரில் கண்டன ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)



மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகைக்கு எதிராக அமைச்சர் றிசாட் பதியுதீன், அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையைக் கண்டித்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலய முன்றலில் நேற்றைய தினம் கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

குறித்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களுடன் இந்துக்களும் கலந்துகொண்டதோடு மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பல ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்: மத ஆராதானையுடன் ஆரம்பமாகிய (19) ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவுடன் தொடர்பு தீர்மானிக்கவில்லையாம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனான தொடர்பு குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியலில் தமது வகிபங்கு குறித்து சரத் பொன்சேகா இன்னமும் தெளிவான தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சரத் பொன்சேகாவின் தீர்மானத்தின் (19) ஆம் பக்கம் பார்க்க

## உரிமைகள் கிடைக்காது என்பதை சர்வதேசத்திற்கு கூற வேண்டும்


### சம்பந்தன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் மட்டக்களப்பில் உரையாற்றுகையிலேயே (19) ஆம் பக்கம் பார்க்க

# நயினாதீவு பிரதேச அபிவிருத்தி அதிகாரிகள் கூடி கலந்துரையாடல்



நயினாதீவு பிரதேசத்தின் சமூக பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் நயினாதீவுப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான துறைசார்ந்த அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நயினாதீவு அமுதசுரபி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நயினாதீவு பிரதேசத்திலுள்ள மக்களின் தேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வேலணைப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளருமான சி.சிவராசா, கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகள், கடற்படை அதிகாரி, பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் முக்கியமான பிரச்சினையாக இறங்குதுறை புனரமைப்பு, மின்சார விநியோகம் என்பன கலந்துரையாடப்பட்டது. அத்துடன் தீவகத்திற்கு மின் பிறப்பாக்கி வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை நயினாதீவுக்கு எடுத்து வருவதற்கான ஊர்தி இல்லாமல் மின் விநியோகம் தாமதமாகவுள்ளது.

விரைவில் மின்பிறப்பாக்கியை நயினாதீவுக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அதற்கான முயற்சிகளைத் தான் மேற்கொள்வதாகத் தெரிவித்த தவிசாளர், வைத்தியர் நியமனம் மற்றும் பிரதேச வீதிகள் சில புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய வீதிகளை புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மேலும் நயினாதீவுப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைத் தவிசாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்தோரிடம் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளதாக இக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

நிரந்தர வைத்திய அதிகாரி இன்மை, அதனால் வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை, வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பிரச்சினைகள், தேவைகள் ஆராயப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதேச சபைத் தவிசாளர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் தீவக அபிவிருத்திகள் வெகுவாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (85)

## கிணறு இறைத்தவர் தவறி விழுந்தார்

(யாழ்ப்பாணம்)

கிணறு இறைக்கும்போது மயக்கம் ஏற்பட்டு கிணற்றில் விழுந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுதிக்கபட்டுள்ளார்.

தொல்புரம் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மாரிமுத்து ஞானம (வயது - 48) என்ற குடும்பஸ்தரே உச்சி பிளந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# “பெருமஞ்ச நாயகனே…” இறுவட்டு வெளியீடு


(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர்களின் இசை வண்ணத்தில் உருவான ‘பெருமஞ்ச நாயகனே’ இறுவட்டு வெளியீட்டு விழா இன்று இரவு 8.00 மணிக்கு இணுவில் கந்தசாமி ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இவ் இறுவட்டுக்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த ரி.எல்.மகாராஜன், அனுராதா ஸ்ரீராம், முகேஸ் மாணிக்கவிநாயகர் மற்றும் பிரபல பாடகர்கள் பின்னணிக் குரல் வழங்கியுள்ளனர்.

இறுவட்டு வெளியீட்டு விழாவின் விசேட நிகழ்வாக இசை ஞான திலகம் வி.ஆர்.ராதா கிருஷ்ணனின் வயலின் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(26)

# வன்னிப் பகுதி மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கல்



கிளிநொச்சி மற்றும் ஒட்டுசுட்டான் பகுதி மாணவர்களுக்கு சீனிகம பகுதியில் இயங்கும் ‘குணஜய சதுட பதமை’ என்னும் நற்பணி மன்றம் 300 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது. இதற்கமைய 300 மிதிவண்டிகளை, ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகத்தின் 64 ஆம் பிரிவு மாணவர்களுக்கு வழங்கும் வைபவத்தை முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகம் முன்னெடுத்ததுடன், கிளிநொச்சி மாணவர்களுக்கான வைபவத்தை கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் தலைமையகமும் மேற்கொண்டது.

இந் நிகழ்வில் ‘குண ஜய சதுட பதனம’ நற்பணி நிலையத்தின் பிரதானி குசில் குணசேகர, 571 ஆம் படைப்பிரிவுத் தலைமையக பொதுக்கட்டளை அதிகாரி பிரிகேடியர் ரோவல், 573 மற்றும் 574 ஆவது படைப்பிரிவுகளின் கட்டளை அதிகாரிகள், மாணவர்கள் உட்பட பல பொதுமக்களும் கலந்துகொண்டனர். கடந்த ஒன்றரை வருட காலங்களுக்குள் இந் நற்பணி அமைப்பானது, 2000 துவிச்சக்கர வண்டிகளை, குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன்கருதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோண்டாவிலில் புண்ணிய கிராம விழா

(கோண்டாவில்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் கோண்டாவில் வேத பாராயண அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்திய புண்ணியக் கிராம விழா கோண்டாவிலில் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்து அபிவிருத்தி உதவி அலுவலர் திருமதி மாணிக்கராசசர்மா அனந்தலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் மா.கோ.காண்டீபனும் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையை விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் திருமதி வ.சோமசூரிய சிங்கம் நிகழ்த்தினார். நிகழ்வின் முன்னதாக கோண்டாவில் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் கோமாதா பூசை நடைபெற்றது. விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கினார். அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், விசேட கருத்துரைகளும் இடம்பெற்றதோடு விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர். கோண்டாவில் மேற்கு கிராமசேவை அலுவலர் திருமதி பி.குணரஞ்சிதம் நன்றியுரை வழங்கினார். (112)

# ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்

புங்குடுதீவு கடற்படையினரின் 13 ஆவது ஆண்டு நிறைவுவிழா கடந்த 21 ஆம் திகதி புங்குடுதீவு கமலாம்பிகை மைதானத்தில் நடைபெற்றது. பிற்பகல் 6 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் கடற்படையினரின் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டதுடன், கமலாம்பிகை பாடசாலைக்கு கணினிகள் வழங்கப்பட்டது.

மேலும் புங்குடுதீவுப் பிரதேசத்திலுள்ள 3 பின்தங்கிய பாடசாலைகளுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வு புங்குடுதீவு கடற்படைக் கட்டளை அதிகாரி தலைமையில் நடைபெற்றதுடன், இதில் காரைநகர், தீவகத்திற்கான கடற்படையின் 2 ஆவது பொறுப்பதிகாரி, மதகுருமார்,அரச அதிகாரிகள், பிரதேச சபை தவிசாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (85)

## இணையத்தினூடாக வேலைவாய்ப்பு வங்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் முதலாவது இணைய வியாபார மற்றும் சேவைகள் விபரக்கொத்தான Jaffnaonline.info அதனுடைய வளர்ச்சியின் அடுத்த படியாக வடக்கில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெறும் செயற்பாட்டை அவர்களது இணைய வேலை வாய்ப்பு வங்கியினூடாக இலகுவாக்கியிருக்கிறது.

## யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியை சந்திக்கவுள்ள இந்துகுருமார் ஒன்றியம்

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சிறுவர் கடத்தல் மற்றும் கோவில் விக்கிரகங்கள் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக இந்து குருமார் ஒன்றியத்திற்கும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதிக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. சமாதான காலத்திற்குப் பின்னர் சிறுவர் கடத்தல்கள் மற்றும் கோவில் விக்கிரகங்கள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையினால் மக்களிடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், விக்கிரகங்கள் திருடப்படுவதால் இந்துசமய மக்களின் நம்பிக்கை மற்றும் இறைபற்று என்பன குறைவடைந்துள்ளன.

இதன் காரணமாக இராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நோக்கத்துடனேயே யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவுடன் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட இந்து குருமார் ஒன்றியத் தலைவர் ஸ்ரீ வாசுதேவ குருக்கள் தெரிவித்தார.

அத்துடன், யாழ். மாவட்டத்தில விகாரைகள் அமைப்பது தொடர்பாகவும், கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும், இக் கலந்துரையாடல் பயனளிக்கும் என தாம் நம்புவதாகவும யாழ். மாவட்ட இந்துகுருமார் ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



10 ஆவது அகவையில்




பெயர்: ஸ்ரீ.கரீஷ்

முகவரி: 8/2, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.


# புதிய அன்னதான மண்டபம் திறப்புவிழா



(தீவகம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அமுதசுரபி அன்னதான சபையினரால் புதிதாக அமைக்கப்பட்ட இரு அன்னதான மண்டபங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத் திருவிழாவன்றுதிறந்து வைக்கப்படவுள்ளது. நயினாதீவு வாழ் மக்களின் நிதியுதவியின் கீழ் அன்னதான சபையினால் விசாலாட்சி மண்டபம் மற்றும் வலுவிழந்தோருக்கான சிறப்பான அன்னதான மண்டபம் ஆகியன புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. (85)

அன்பை அபகரிப்பதில் திருடனாய் இரு!
அறிவைப் பெருக்குவதில் பேராசைக்காரனாய் இரு!
முன்னேற முயற்சிப்பதில் பிடிவாதக்காரனாய் இரு!
- பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## அல்லலுறும் மக்களின் பேரால்....

“தம்முடைய கலாசாரத்தின் சிறப்புகளையும், தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது” என்று குறிப்பிடுகிறார் பிரபல பலஸ்தீன அறிஞரான எட்வேர்ட் ஸெய்த். தேசியக் கருத்தியல்களில் ஊறி எளிமையான ஆத்திரங்களுக்கு எடுபட்டு, விமர்சன உணர்வை இழப்பதும் உணர்ச்சியடிப்படையிலான பொதுநீரோட்டக் கருத்துகளுக்கு ‘ஆமாம்’ போடுவதும் அவர்தம் இயல்பல்ல என்கிறார் அவர்.

ஆண்ட பரம்பரைக் கதைகளையும், பண்டைய மேன்மைகளையும் சொல்லி நடப்புலகைக் காணவிடாது இன்றும் நம்மைக் கனவுலகத்தில் மிதக்க வைத்துக் கொண்டிருப்பவர்களால் சாமானிய வாழ்க்கை எப்படிக் கதிகலங்கிப் போகும் என்பதைப் பார்த்துவிட்டோம்; பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நீதிக்கும் சமத்துவத்துக்கும் கௌரவத்துக்குமான போராட்டம் என்பது இன்றைய சிக்கல்களையும் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாகவே வடிவமைக்கப்பட வேண்டும். வெறும் உணர்ச்சிவசப்பட்ட விருப்பங்களை விசிறியடித்தபடியே இந்த சிக்கல்களைக் கடந்துவிட முடியாது.

தேசபக்தி ஆவேசங்களை அள்ளி விசிறி, இன்று மக்களைக் கஷ்டப்பட வைத்துக் கொண்டிருப்பவர்களும், அவற்றுக்கெல்லாம் எதிர்காலத்துக்கான ஒரு ‘விடுதலை நியாயத்’தைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களும், தாங்கள் மக்களை ஏமாற்றவில்லை என்பதில் மனசாட்சிக்கு உண்மையாக இருக்கிறோமா என்பதைத் திரும்பவும் ஒருமுறை கேட்டுப்பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த நம்பிக்கையில் மக்களைத் தொடர்ந்து கஷ்டப்பட வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தமக்குள்ளாகவேனும் பலமுறை விசாரித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மக்களின் இன்றைய கஷ்டங்களை மாற்றும் எத்தனங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, ‘அது நடக்காத அலுவல்’ என்ற முடிந்த முடிவுக்குள் தள்ளிவிட்டு, புதிது புதிதாய் கஷ்டங்களைக் கண்டுபிடித்துப் பிரலாபம் வைத்துக் கொண்டிருப்பதையே அரசியலாய்ச் செய்துவருவது சரிதானா?

தங்களது ரோசத்திற்கும், எதிர்பார்ப்புகளுக்கும், வீம்புகளுக்கும் ஏற்ப மட்டுமே தீர்வு வரவேண்டும் என்று அழுத்தமான பிடிப்போடு இருப்பவர்கள், அந்த லட்சியம் தவிர வேறெதுவும் முக்கியமல்ல என்று நினைக்கின்றவர்கள் அடிப்படையில் சுயநலவாதிகள்தான். அவர்களிடம் எல்லையற்ற அகந்தையே நிறைந்து கிடக்கிறது. அதனாலேயே சாதாரண மக்களின் இயல்பு வாழ்வுக்கான சமரசங்களை செய்துகொள்ள மறுப்பவர்களாயிருக்கிறார்கள். இது தங்களது இலட்சியங்கள், வேட்கைகளுக்காக சாதாரண மக்களைக் கஷ்டப்பட வைக்கவும் பலிகொடுக்கவும் தயங்காத தீவிரவாதமாக மாறிவிடுகிறது.

இந்த நாட்டையும் மக்களையும் மேலும் பாழ்படுத்தாது, காப்பாற்றுவதிலும் முன்னேற்றுவதிலும் அக்கறை இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பினரும் இறங்கி, செயற்படும் தளத்தில் சந்தித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.

எல்லோரும் இதுவரை சென்ற பாதைகளிலிருந்து திரும்பி வந்து, நம் அனைவரினதும் எதிர்காலத்திற்காக நாம் இணைந்து செல்ல வேண்டிய புதுப் பாதையைத் தெரிவு செய்துகொள்ள வேண்டிய வாய்ப்பை மீண்டுமொரு தரம் தவற விடுவதும் மீண்டும் மீண்டும் வருத்தப்படுவதுமாகத் தொடர வேண்டாம். பழைய முரண்களைப் பேசிப் பேசியும், பழைய ஆவேசங்களைக் கைவிடாமலும் பகைவெறுப்பை வளர்த்து போலி விடுதலை நம்பிக்கைகளை ஊட்ட வேண்டாம்.

சொல்லொணாப் பாடுகள் அனைத்தும் பட்டு, வாழ்விழந்து நொந்து அல்லலுறும் அப்பாவி மக்களின் பேரால் அவற்றை மறந்து விடுவதற்கு ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

- ஆசிரியர் -

# சைவசமயம் கற்கும் மாணவர்களுக்கான கற்றல் கையேடு இன்று வெளியீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சைவ சமய பாடம் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினரால் கற்றல் கையேடு வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலய சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இராமலிங்கம் தயாரித்த கற்றல் கையேடே இம்மாணவர்களுக்காக வெளியிடப்படவுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் வ.ஸ்ரீப்பிரகாஷ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினரர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வணிக மன்றத்தின் அங்கத்தவர்களின் பங்களிப்புடன் கல்விசார் புலமைப்பரிசில் நிதி ஆகியவற்றின் மூலம் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் திட்டமாக இவ்வலயத்தில் 1200 மாணவர்களுக்கு இக் கையேடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய பாடங்களுக்கும் இவ்வாறான கற்றல் கையேடுகளை வழங்கி மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்த பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என கைத்தொழில் வணிக மன்றத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# மூதூர் படுகொலை விசாரணை துரிதம்; பாதிக்கப்பட்டவர்களுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

மூதூர் படுகொலை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மீது அச்சுறுத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

2006 ஆம் ஆண்டு மூதூரில் 17 தன்னார்வத் தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இனம் தெரியாத நபர்களினால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வருவதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர் எனக் குறித்த குடும்பங்களின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேலு தெரிவித்துள்ளார்.

சிலர் ஏற்கனவே திருகோணமலையை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாகவும் பலர் தொடர்ந்தும் அதே பிரதேசத்தில் வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சட்ட மா அதிபர் திணைக்களம் மேற்படி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்தர மாணவர்களுக்கு துணுக்காயில் செயற்றிட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட் துணுககாய் கல்வி வலயத்திலிருந்து இவ்வருடம் க.பொ.த(சாதாரண தரம்) மற்றும் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இவ்வடிப்படையில் க.பொ.த. (சாதாரணம்) தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு விசேட செயலமர்வுகளும் பரீட்சைகளும் ஒவ்வொரு சனிக்கிழமையும் கோட்ட ரீதியாக குழுமப் பாடசாலைகளினை இணைத்து அந்தக் குழுமப் பாடசாலைகளின் ஆசிரியர்களை வளவாளர்களாகக் கொண்டு இத்திட்டம் அமுலபடுத்தப்படவுள்ளது.

க.பொ.த.(உயர்தரம்) இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் சகல பாடங்களுக்கும் இவ்வடிப்படையில் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு பாடத்திற்கு 15 வகுப்புக்களினைக் கொண்டதாக இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுவதற்கான நிகழ்ச்சி ஒழுங்குகளினை கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெற்ற க.பொ.த. (சாதாரணம், உயர்தரம்) ஆசிரியர்களுககான சந்திப்பில் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.எம்.ஜெனிற்றன் அறிவித்துள்ளார். (42)

# பஸ் நிலையத்திற்கு புனரமைப்பு எப்போது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏ-9 சாலையில் உள்ள பிரதான பேருந்துத் தரிப்பு நிலையமொன்று நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது பாழடைந்த நிலையில் காணப்படுகிறது.

அரியாலை - மாம்பழம் சந்திக்கு அருகாமையில் யாழ். செல்லும் பயணிகளுக்கான பேருந்துத் தரிப்பு நிலையமே இவ்வாறு சுவர்கள் இடிந்து பாவனையற்ற நிலையில் காணப்படுகிறது. இதனால் யாழ்.நோக்கி பயணிக்க வரும் பயணிகள் வெய்யிலிலும், மழையிலிலும் அவலப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

எனவே, இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட யாழ்.மாநகர சபையினர் உரியகவனம் எடுத்து குறிப்பிட்ட இப்பேருந்து நிலையத் தரிப்பிடத்தைப் புனரமைப்புச் செய்து பயணிகளின் அசௌகரியங்களை நீக்க வேண்டுமென பொதுமக்கள் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (138)

# திரிபோசாவை ஏற்றுமதி செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

திரிபோசா நிறுவனத்தின் உற்பத்தி விகிதத்தை அதிகரிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கென 10 இலட்சத்து 147 ரூபா திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் திரிபோசா அடுத்த மாதம் முதல் நூற்றுக்கு நூறு வீதமாக்கப்படும்.

திரிபோசா நிறுவனத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஓகஸ்ட் மாதம் முதல் அதன் உற்பத்தியை 125 வீதமாக அதிகரிக்க சுகாதார அமைச்சு எண்ணியுள்ளது.

அதன் பின்னர் திரிபோசாவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கென 25 நாடுகளில் கேள்வி நிலவுவதாகவும் அதில் அபிவிருத்தி அடைந்த நாடுகளைத் தெரிவு செய்து உலக உணவுத் திட்டத்தின் கீழ் எஞ்சிய திரிபோசாவை அங்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சி சந்தை வாய்ப்பிலேயே தங்கியுள்ளது

(கிளிநொச்சி)

குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சி உற்பத்திகளுக்கு கிடைக்கின்ற சந்தை வாய்ப்பிலேயே தங்கியுள்ளது என ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேச சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் வாழ்வெழுச்சித்திட்ட கண்காட்சி ஆரம்ப நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சியும் அதனூடான பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வகையில்குடிசை கைத்தொழில்களின் உற்பத்திகளுக்கு போதியளவு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்தோடு திறந்த போட்டிச் சந்தையில் போட்டிபோட்டு உற்பத்திகளை சந்தைப்படுத்தும் அளவுக்கு கவர்ச்சியான பொதியிடல் உள்ளிட்ட ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அப்போதுதான் அது ஒரு வெற்றிகரமான துறையாக அதனை மேற்கொள்கின்ற சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்.



அழிந்துபோன கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு இதுபோன்ற செயற்திட்டங்கள் மிக மிக அவசியமானது. மக்களும் இதனை உரிய முறையில் பயன்படுத்தி முழுமையான பயனைப் பெற வேண்டும்.

சில நிறுவனங்களால் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதார உதவித் திட்டங்கள் அவர்களின் வாழ்வாதாரத்தோடு சம்பந்தப்பட்ட விடயமாகவே உள்ளது. பொருத்தமற்ற வாழ்வாதார உதவிகள் மக்களிடம் திணிக்கப்படுகிறது. இது உண்மையில் மிகவும் பயனற்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஸ்கந்தபுரம் பொதுநூலகத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம் பகுதியில் இயங்கி வரும் பொதுநூலகம் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதால் அதனை வாசகர்கள் பயன்படுத்த முடியாதநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சிப் பிரதேச சபைக் குட்பட்ட மேற்படி நூலகத்தில் தளபாடம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்மையால் வாசகர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் வெளியீத்தகவல்கள் பெறும் வகையில் பத்திரிகைகளை வாசிப்பதற்கும் மாணவர்கள் கல்வி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் இந்நூலகமே பிரதானமானதாக இருக்கின்ற நிலையில், இந்நூலகம் சரியான முறையில் சீரமைக்கப்படாது இருப்பது வேதனைக்குரிய விடயம் என அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு இந்நூலகத்தை சீரமைக்க உரியவர்கள் ஆவன செய்யுமாறு மாணவர்களும் வாசகர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# காசநோயிலிருந்து பாதுகாக்க நடமாடும் விழிப்புணர்வு சேவை

(வடமராட்சி)


வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் காசநோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடமாடும் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு சேவை நடத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட காசநோய் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்திலுள்ள மருதங்கேணி, குடத்தனை ஆகிய பகுதிகளில் காசநோயினால் 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில ஒருவர் சிறுவனாக உள்ளமை வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

இப்பிரதேசங்களில் காசநோய் தொடர்பான போதியளவு விழிப்புணர்வுகள் இன்மையே இதற்குக் காரணமாக அமைகிறது.

இந்த நிலையில் காசநோயிலிருந்து இப்பிரதேசத்திலுள்ள மக்களைப் பாதுகாக்கும் வகையில் இந்த நடமாடும் சேவையை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எஸ்)

# கிளிநொச்சி கல்வி வலயத்தால் புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை



(முழங்காவில்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி பயிலும் 2400 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 6ஆம் கட்ட முன்னோடிப் பரீட்சை கடந்த வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்டது.

மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் ஆரம்பப் பிரிவின் 5 சேவைக்கால ஆசிரியர்களுள் நேரடித் தரிசிப்புடன் மேற்கொண்டு பரீட்சை ஒழுங்கமைப்பு சம்பந்தமான மதிப்பீட்டைச் செய்துள்ளதாக கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் பூநகரி, பளை, கரைச்சி, கண்டாவளைக் கோட்டங்களில் 50 பேரைக் கொண்ட மாணவர் குழுக்களுக்கு நான்கு நிலையங்களில் விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (112)

# கச்சாய் பொதுநூலகத்தின் வலுவூட்டல் செயற்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினால் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கச்சாய் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத் தவிசாளர் இ.துரைராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், மாணவர்களுக்கான வலுவூட்டல் நிகழ்வை தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராஜா வழங்கவுள்ளார். தொடர்ந்து முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (11)

# ஆலயம் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை - துண்டிச் சந்தியில் அமைந்துள்ள புனித மிக்கேல் தூதர் சிற்றாலயம் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இந்த ஆலயம் தற்போது பொது மக்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. (21)

# சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவையொட்டி யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினால் அங்கத்தவர்கள், பணியாளர்கள் கிடையே பல்வேறு போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களான போட்டியில் ஆண்களுக்கு கூட்டுறவு அபிவிருத்திக்கு வினைத்திறன்மிக்க தலைமைத்துவம் அவசியம் என்னும் தலைப்பிலும், பெண்களுக்கு கூட்டுறவில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் என்னும் தலைப்பிலும் அமைவதுடன் 3 பேருக்கு மேற்படாமல் அமைய வேண்டும்.

பணியாளர்களுக்கான போட்டியில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக பேச்சு - கட்டுரை - கவிதை - வினாடி வினா போன்றனவும் அங்கத்தவர்கள், பணியாளர்கள் இணைந்த குழுப் பாடல், நாடகப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில் பேச்சு கீழ்ப்பிரிவுக்கு 'நான் கண்ட கூட்டுறவுப் பெரியார் அல்லது நான் ஒரு கூட்டுறவு சங்கத் தலைவரானால்' மத்திய பிரிவுக்கு பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம் அல்லது கூட்டுறவுக் கல்வி, மேற்பிரிவுக்கு கூட்டுறவுத் தலைமைத்துவம் அல்லது கூட்டுறவுக் கொள்கைகள் மேலும் அதி மேற்பிரிவுக்கு கூட்டுறவு மூலம் புதிய தொழிற்துறைகளை உருவாக்குவோம் அல்லது யாழ். மாவட்ட கூட்டுறவின் தற்போதைய நிலை ஒருகண்ணோட்டம் போன்ற தலைப்புக்களில் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து இரண்டு மாணவர்கள் பங்குபற்ற முடியும்.

வினாடிவினாப் போட்டியில் பாடசாலைகளிலிருந்து 3 பேர் கொண்ட குழு மட்டும் பங்குபற்ற முடியும். சிறுவர் பாடசாலைக் குழு நடனப்போட்டியில் 4 பேருக்கு குறையாமலும் 8 பேருக்கு மேற்படாமலும் கூட்டுறவு தொடர்பான பாடல் கொண்டதாக இருக்க வேண்டும்.

சங்கங்களுக்கான போட்டிகளாக கூடுதலான விற்பனை செய்யும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம், ரொக்க விற்பனை செய்யும் கிளை முகாமையாளர், உள்ளூர் உற்பத்தியை விற்பனை செய்யும் ப.நோ.கூ.ச. சங்கம், சிறந்த சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், சிறந்த கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைத் தெரிவுசெய்யும் போட்டியும் இடம்பெறவுள்ளது.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், சங்கத்தலைவர், பொது முகாமையாளர் ஊடாகவும், பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாகவும் விண்ணப்பிப்பதுடன், விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபை, வீரசிங்கம் கட்டடத்தொகுதி, இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# நடைமுறையை பின்பற்றுமாறு வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காலாவதியான பொருட்களை விற்றல், விலைப்பட்டியலில் பொருட்களின் விலைகளை வெளிப்படுத்தாமல் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிடக் கூடிய விலைக்கு விற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

தற்போது பால்மா, மா, பாண், சீனி, சிமெந்து ஆகிய பொருட்களின் விலையேற்றத்தை அடுத்து, புதிதாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளை பொதுமக்களுக்கு வர்த்தகர்கள் காட்சிப்படுத்த வேண்டும். அத்துடன் காலாவதியான பொருட்களை வர்த்தக நிலையங்களில் வைத்திருக்காது அழிக்கும் நடவடிக்கையையும் உரியமுறையில் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாறாக அதிகூடிய விலைக்குப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்கள் 021 221 9000 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமக்குத் தெரியப்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார். (என்)

# பகுப்பாய்வுகளை சமர்ப்பிக்கவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகள் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையின் 9ஆவது மாதிரிப் பரீட்சையின் பகுப்பாய்வுகளை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கடந்தவாரம் தென்மராட்சிப் பாடசாலைகளில் நடைபெற்றது. இப்பரீட்சைப் பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வுகளைப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

மேலும் பகுப்பாய்வின் அடிப்படையில் 150 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (11)

# "அருணோதயம்" சஞ்சிகை வெளியீடு; மாணவர் மன்றத்தின் கன்னி முயற்சி

(முழங்காவில்)

பூநகரி மகா வித்தியாலய உயர் தர மாணவர் ஒன்றியத்தின் முதல் வெளியீடான "அருணோதயம்" சஞ்சிகை நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.



உயர்தர மாணவர் மன்றத் தலைவர் கே.மதுசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னதாக பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கிளி. வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பூநகரி கோட்டக்கல்வி அலுவலகர் எஸ்.தருமரத்தினம், பாடசாலை அதிபர் ஆர்.பாலச்சந்திரன் உட்பட ஏனைய விருந்தினர்கள் மாணவர்களால் மாலை சூட்டப்பட்டு விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இந் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை இப்பாடசாலையின் முன்நாள் அதிபர் பொன்.தில்லைநாதன் நிகழ்த்தினார். நூல் ஆய்வுரையை கிளி.வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் நிகழ்த்தினார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் உரையாற்றுகையில்; உயர்தர மாணவர் மன்றத்தினால் அழகிய கருத்தாழமிக்க அருணோதயம் என்ற பெயரைத் தாங்கி வெளிவரும் இச் சஞ்சிகையின் பலதரப்பட்ட ஆக்கங்களும் மிகவும் காத்திரமானதாக இருப்பதுடன், பல நவீன தொழில் நுட்பத்துடனான ஆக்கங்கள் இச்சஞ்சிகையில் வெளிவருவது பாராட்டுக்குரியதாகும். உங்கள் மத்தியில் ஏனைய இடங்களில் காணமுடியாதவாறு சிறந்த படைப்பாளிகள் இலைமறைகாயாக இருந்திருப்பதை இன்று அறிய முடிகிறது. உங்கள் ஆற்றலை வெளிக்கொணருவதற்கு காரணமான மன்றப் பொறுப்பாசிரியர், அதிபர் ஏனைய ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன், உங்கள் படைப்பாற்றலை வளர்த்து மாவட்ட மட்டத்தில் சாதனை படைப்பீர்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென்றார். மன்றப் பொறுப்பாசிரியர் எஸ்.ஜெயரூபன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(112)



மானிப்பாய் பொலிஸார் ஆனைக்கோட்டையில் நடாத்திய நடமாடும் சேவையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.உதவி பொலிஸ் அத்தியட்சகர் அபேயசிங்க தேசியக் கொடி ஏற்றுவதைக் காணலாம். (104)

# சேதமடைந்துள்ள சட்டநாதர் வீதி; விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

யாழ் - நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள சட்டநாதர்வீதி மிகவும் மோசமாகப் பழுதடைந்து காணப்படுகின்றது. கோவில் வீதிச் சந்தியில் இருந்து இளம் கலைஞர் மன்ற மண்டபம் வரையான பகுதியே பல மாதங்களாக குண்டும் குழியுமாக இருந்து வருகிறது.

அந்தப் பகுதிகளில் மோட்டார் சைக்கிள், ஆட்டோ, சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் பயணிப்போர் குழிகளை விலத்தி ஓடுகையில் எதிரில் வருகின்ற இன்னுமோர் வாகனத்தில் முட்டி மோதி விபத்துக்குள்ளாகின்ற அபாயம் தோன்றுகிறது.

அவ் வீதியை பயன்படுத்தும் மக்கள் நாளாந்தம் சொல்லொணா அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சம்பந்தப்பட்டோர் வீதியை செப்பனிட்டு உதவுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

(68)

# பரமர் சங்கமம்



நண்பரொருவர் கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? என என்னிடம் கேட்டு வைத்தார். வேதாகமம் போதித்த வரலாற்றை வைத்து கடவுள் என்பவரை ஏகாதிபத்திய முதலாளித்துவவாதியென்னும் எண்ணத்தை அவரிடம் ஒப்புவித்தேன்.

உடனே அவர் "கடவுள் என்றால் நானாகவும் இருக்கலாமா?" என்றார். இருக்கலாம்; மனித சாயலை கொண்டவரென்றும், தன்னுடைய உடலமைப்பை கடவுள் மனிதனுக்கு வழங்கினாரென்றும் வேதாகம நூல்கள் தெரிவித்துள்ளனவென்றேன்.

அதுவும் இல்லாமல் சீனக் கிராமியக் குட்டிக் கதைகளில் கடவுளை மனிதன் தான் படைத்தவனென்றும், நாம் பெரும்பாலானோர் நினைத்துக் கொண்டிருப்பது போன்று கடவுள் மனிதனைப் படைத்திருக்கவில்லை என்றும் அறியப்படுவதையும் சொன்னேன்.

அதேவேளை ஆதி மனிதர்களான ஆதாமும், ஏவாளும் கடவுளால் விலத்தி வைக்கப்பட்ட கனியை உண்டதால் சகலதையும் அறிந்து கொள்ள முடிந்ததால் வாழ்க்கையில் இன்றைய முன்னேற்றம் வரை வளர்ச்சி அடைய முடிந்துள்ளதையும் சுட்டிக் காட்டினேன்.

அதனால் இவற்றையெல்லாம் மனிதன் அறிந்து விடக்கூடாதென தடுத்த கடவுள் ஒடுக்கு முறைவாதி. அதால் அவரொடு ஏகாதிபத்திய முதலாளித்துவ வாதியாக எனக்குப் படுகின்றாரென்பதையும் தெரிவித்தேன்.

இல்லையேல் இன்றைக்கு வரையும் வெட்கம் என்பது என்ன என்பதையும் தெரியாமல் இலை குழை மறைவில் வாழ்ந்து கொண்டிருந்திருப்பான் மனிதன்.

கடவுளால் தீண்டக் கூடாத கனி என்பதை ஆதாமும், ஏவாளும் புசித்ததால் இன்றைய அறிவுலக மேதையாக மனிதன் சஞ்சாரம் செய்ய முடியாதல்லவா?


அறிவு வளர்ச்சியைப் பெருக்கிக் கொண்டதால் பரந்து பட்ட அளவில் மனித சமுதாயத்தைப் பெருக்கிக் கொண்டு வாழும் முறைமைகளையும் அவன் உருவாக்கினான்.

நாகரிகத்தை அறிந்த மனிதன் கல்வியைப் பெருக்கிக் கொண்டான். கல்வி அறிவால் நிர்வாகிக்கும் ஆற்றலையும் கற்றுக் கொண்டான்.

அதனூடாக கடல், வான், தரை மார்க்கமான போக்கு வரவுகளையும், செய்திப் பரிவர்த்தனைகளையும் வளர்த்துக் கொண்ட மனிதன்; ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் வல்லமையைப் பெருக்கிக் கொண்டான்.

இந்த அளவுக்கு மனிதன் வாழ்ந்துவிடக் கூடாதென விழிப்புடன் செயல்பட்ட கடவுளின் உண்மையான தோற்றத்தை ஏகாதிபத்திய முதலாளித்துவ வாதியென்றும், தீண்டத்தகாத அந்தக் கனியைப் புசித்ததாலே அறிந்து கொள்ள முடிஞ்தெண்டால் இது பொய்யோ புழுகோ சொல்லுங்க பாப்பம்...

# "காவலூர் தரிசனம்" வெளிவந்துள்ளது




(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செய்திகள், தகவல்கள், தரவுகளைத் தங்கி காவலூர் தரிசனம என்னும் தலைப்பில் ஊர்காவற்றுறை பிரதேச சபையால் செய்திமடல் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

தரிசனம் - 1 என்னும் செய்திமடலில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தொடர்பான புள்ளி விபரங்கள், அபிவிருத்திப் பாதையில் என்னும் தலைப்பில் 27.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகம், புனரமைப்புச் செய்யப்பட்ட மெலிஞ்சிமுனை வீதி, அனலைதீவு கடையடி குறுக்கு வீதி, முகாம் வீதி மற்றும் புனரமைக்கப்பட்ட கொல்களம் என்பனவற்றின் படங்கள் மற்றும் 2011, 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய புனரமைப்பு வேலைகள் விபரம், ஊர்காவற்றுறையின் பழம்பெரும் கல்லூரியான புனித அந்தோனியார் கல்லூரியின் வரலாறு, பிரதேசசபையின் எல்லைகள் என்பனவற்றுடன், பிரதேச சபை உறுப்பினர்களின் விபரமும், பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களின் தொலை பேசி இலக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

# வீதிப்புனரமைப்பு

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் பிரதேச சபையால் புனரமைக்கப்படவுள்ளது.

மாதகல் புக்கைபுலோ வீதி, நவாலி வரகு சாட்டி வீதி, சங்கானை வைத்தியசாலை வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப் படவுள்ளன.

பெரும்பாலும் இந்த வீதி புனரமைப்பு வேலைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

(54)

# பொது அறிவுப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் நூலக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாசகர்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சரசாலை பொது நூலகத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

(11)


# முரசின் இன்றைய பலன்

(28.05.2012 -திங்கட்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 15 ஆம் திகதி. ஸப்தமி முற்பகல் 9.55 வரை. நட்சத்திரம் மகம். மரணயோகம் முன்னிரவு 8.50 வரை. அட்டமி முற்பகல் 9.55 இன் மேல். அக்கினி நாள் முடிவு பிற்பகல் 1.55 வரை. இராகுகாலம் 7.22 - 8.52 வரை. சுபநேரம 11.52 - 12.02 வரை. எமகண்டம் 10.22 - 11.52 வரை. குளிகைகாலம் 1.22 -2.52 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நிதானம் நன்று, கடின உழைப்பால் வெற்றி, கொடுத்த கடன் தேடி வரும், உடல் ஆரோக்கியம். |
| ரிஷபம் | புதிய வாய்ப்புக்கள், பணப்பரி மாற்றம், வேலைப பளு குறையலாம், உறவினர் வருகை. |
| மிதுனம் | வியாபாரத்தில் ஆதாயம், அடிக்கடி பயணம் மேற்கொள்ளல், நீண்டநாள் கனவு பலிக்கும். |
| கடகம் | கவலைகள் அதிகரிப்பு, புதிய கொள்வனவில் கவனம், முற்கோபம் தவிர்க்கவும். |
| சிம்மம் | எதிலும் கவனம் தேவை, பணியில் நெருக்கடிகள், பல வழிகளில் பணம் தேடி வரும். |
| கன்னி | தொழில் ஆதாயம், புத்திர வழியில் மகிழ்ச்சி, அதிகாரிகள் ஆதரவு, பணியில் இடையூறு. |
| துலாம் | நற்காரியங்கள் செய்தல், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், தொட்டது துலங்கும். |
| விருச்சிகம் | அடிக்கடி மறதி, வெளியூர் வாய்ப்பு, வாக்குறுதி கொடுக்க வேண்டாம், பணிச்சுமை அதிகரிக்கும். |
| தனுசு | புத்தி மேன்மை, குடும்பத்தில் நிம்மதி எதிர்ப்புகள் விலகும், பொன் பொருள் சேரும். |
| மகரம் | வாழ்வில் இன்பம், பூர்வீக சொத்துக்களால் அனுகூலம், ஆரோக்கியத்தில் பாதிப்பு. |
| கும்பம் | கடன் தொல்லை, உறவினர்கள் ஆதரவு, புதிய வேலைவாய்ப்பு கிட்டும், சிக்கலில் மாட்ட நேரிடும். |
| மீனம் | சாதாரணமான நாள், வாழ்கையில்முன்னேற்றம், நிலுவை கிடைக்கும், நினைத்தது நிறைவேறும். |







# ஜே.பி.எல். நேற்று கோலாகல ஆரம்பம்; முதல் வெற்றியைப் பதிவாக்கியது ஜொலிஸ்ரார்

URFF JAFFNA PREMIER LEAGUE JPL

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். (யாழ்ப்பாண பிறிமியர் லீக்) ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர் நேற்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கோலாகல மாக ஆரம்பமானது.


இப்போட்டித் தொடரில் முதல் வெற்றியைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பை ஜொலிஸ்ரார் அணி பெற்றுக்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் யூ.ஆர். பிறண்ட் பவுண்டேசன் நிறுவனத்தினால் முதன்முறையாக ஆரம்பிக்கப் பட்டுள்ள இக்கிரிக்கெட் தொடர் யாழ். மாவட்ட கிரிக்கெட் வளர்ச்சிக்கு பெரும் துணை புரியும் என நம்பப்படுகின்றது.

அந்த வகையில் நேற்று ஆரம்பமான ஜே.பி. எல். கிரிக்கெட் தொடரின் முதல் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி வேகமாக ஆடி ஓட்டங்களை அதிகரித்தது. இறுதியில்ஜொலிஸ் ரார் அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற் றது. இதில் அணித் தலைவர் சைலேஸ்வரன் 25 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸ ர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களையும், மதுஷன் 21 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களையும், சஜிகன் 14 பந்துகளை எதிர் கொண்டு இரண்டு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் லவேந்திரா நான்கு ஓவர்கள் பந்து வீசி ஆறு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், காண்டீபன் 43 ஓட்டங் களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், மயூரன் 27 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி ஆரம்பம் முதலே சமஇடைவெளியில் விக்கெட்டைப் பறிகொடுத்து வந்தது. இறுதியில் 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுஷன் 22 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களையும், அகிலன் 23 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களையும், கஜிபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன் 19 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சைலேஸ் வரன் 27 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், ஜெனார்த்தனன் 20 ஓட்டங் களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப்போட்டியில் முதல் சிக்ஸர் அடித்தமைக்காக ஜொலிஸ்ரார் அணித் தலை வர் சைலேஸ்வரனுக்கு சிறப்புப் பரி சில் வழங் கப்பட்டதுடன் போட்டியின் ஆட்டநாயகனாக வும் அவரே தெரிவு செய்யப்பட்டார். ஆட்ட நாய கனாக தெரிவு செய்யப்பட்ட அவருக்கு 3000 ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு போட்டியிலும் வெல்லப்போகும் அணி எது என்பதை வெளிப்படுத்தும் போட்டியும், இரசிகர்களிடையேநடத்தப்பட்டது.இப்போட்டி யில் வெல்லும் இரசிகருக்கும் பரிசில் வழங்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, போட்டித் தொடரை பிரபலப் படுத்தும்முகமாகவும்,போட்டியின் நோக்கம்குறித் தும் விசேட பாடல் ஒன்று போட்டி ஏற்பாட் டாளர்கள் உருவாக்கப்பட்டு போட்டியின்இடை வெளியின் போது ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

இதேவேளை, ஆரம்ப நிகழ்வில் சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, யாழ். மாவட்ட கடற்படை அதிகாரி பி.ஐ..எல். ஆர். சில்வா, யாழ். மாவட்ட படைத் தலைமைய தலைமை பிரிகேடியர் அஜித் பல்லேவல, யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆ.எம். செனரத் பண்டர, வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன், யூ.ஆர். பிறண்ட் பௌண்டேசன் நிறுவனத் தலைவர் செவ்வேள், யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் மற்றும் ஏராளமான ரசிகர்கள் போட்டி நிகழ்வை கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., எஸ்,சி.)



# இங்கிலாந்து அணி வலுவான ஆரம்பம்

(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஸ்ரோஸன் சிறப்பான சதத்துடன் இங்கிலாந்து அணி நிதான-மாக ஆடிய வருகின்றது.

இங்கிலாந்து, மேற்கிந்த்தியத்தீவுகள் அணிக்கிடை யிலான மூன்றுபோட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொட ரின் இரண்டாவது போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெடுக்களையும் இழந்து 370 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் டரன் சாமி 106, சாமு வேல்ஸ் 117 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரென்னன் நான்கு, புரொட், அண்டர்சன், ஸ்வான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் அணித் தலைவர் ஸ்ரோஸ் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பீற்றர்சன் ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ராம்போல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஏற்கனவே முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.




# உசைன் போல்ட் தங்கம்

(ஆஸ்டிரவா)

செக் நாட்டில் நடந்த தடகள போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில், ஜமைக்காவின் உசைன் போல்ட் தங்கம் வென்றார். லண்டன் ஒலிம்பிக் ஜூலை 27இல் ஆரம்பமாகவுள்ளது. இதற்கு முன் செக் குடியரசின் ஆஸ்டிரவா நகரில் கோல்டன் ஸ்பைக் தடகள போட்டி நடந்தது. இதில் பங்கேற்ற 2008 ஒலிம்பிக் சம்பியன், மின்னல் மனிதன் உசைன் போல்ட் (ஜமைக்கா), 100 மீ. தூரத்தை 10.04 வினாடியில் கடந்து தங்கம் வென்று அசத்தினார்.

அடுத்த இரு இடங்களில் (10.19, 10.22 வினாடி) வந்த கிம் கோலின்ஸ் (செயின்ட் கீட்ஸ்), டார்விஸ் பேடன் (அமெ ரிக்கா), வெள்ளி மற்றும் வெண்கல பதக்கம் வென்றனர். வெற்றி குறித்து உசைன் போல்ட் கூறுகையில், இந்த சீசனில் 9.82 வினாடியில் 100 மீ. தூரத்தை கடந்துள்ளேன். இதற்கு அதிகமான நேரத்தில் இப்போது வந்தது எப்படி என விவரிக்கவே கஷ்டமாக உள்ளது. எங்கு தவறு நடந்தது எனத் தெரியவில்லை என்றார்.

# சானியா ஜோடி சம்பியன்

(பிரஸ்சல்ஸ்)

பிரஸ்சல்ஸ் ஓப்பன் ரென்னஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

பிரஸ்சல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி பெல்ஜியத்தில் நடந்தது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவில் இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா-அமெரிக்காவின் பெதானி மெடக் சாண்ட்ஸ் ஜோடி, ரோசோல்கா (போலந்து)-ஷங் (சீனா) ஜோடியை சந்தித்தது. 70 நிமி டம் நடந்த இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா-பெதானி மெடக் சாண்ட்ஸ் ஜோடி 6-3, 6-2 என்ற நேர்செட்டில் ரோசோல்கா-ஷாங் ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட் டத்தை தனதாக்கியது.

# அனுமதி பெற்ற பின்பே நேர்காணல்

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவதற்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதன்படி ஊடகங்களுடன் நேர்காணல்களிலோ, கலந்துரையாடல்களிலோ ஈடுபட விரும்பும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் ஜெயசேகரவிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்கான சட்டதிட்டங்களை இலங்கைக் கிரிக்கெட் சபையின் வழக்கறிஞர் ஹர்ஷா அமரசேகரவிடம் கலந்துரையாடி அஜித் ஜெயசேகரவே வரையவுள்ளார். அந்த நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் அனைத்து ஒப்பந்த வீரர்களுக்கும் இந்தக்கடிதம் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் வீரர்களின் ஒப்பந்தத்திலும் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீரர்களுக்கான புதிய ஒப்பந்தங்கள் ஜூன் 1ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள பாகிஸ்தான் தொடருக்கு முன்னர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான குமார் சங்கக்காரவிற்கு கடிதமொன்றை அனுப்பவும் இலங்கைக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. பத்திரிகையொன்றிற்கு அவர் வழங்கிய பேட்டி தொடர்பாகவே இந்தக் கடிதம் அனுப்பப்படவுள்ளது.

# ரியூடரின் சிறப்பான துடுப்பாட்டம் கிண்ணம் வென்றது பற்றீசியன்ஸ்



படம் : சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

ரியூடரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரில் யாழ். பற்றீசியன்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ். மாவட்ட ரீதியாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

40 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணியும், பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 37.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காண்டீபன் 55, டக்சன் 31, லவேந்திரா, றஜிந்தன் தலா 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரிக் பிரதாப் 30 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், சஜிந்திரன் 40 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 238 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 34.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரியூடர் ஆட்டமிழக்காது 85, செய்சில் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் சஜிந்திரன் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் காண்டீபன் இரண்டு, அகிலன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக பற்றீசியன்ஸ் அணியைச் சேர்ந்த ரியூடரும், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த எரிக் பிரதாப்பும், சிறந்த களத்தடுப்பாளராக ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த றஜிந்தனும், ஆட்ட நாயகனாக ரியூடரும் தெரிவு செய்யப்பட்டனர். (எஸ்.பி.,20)

## விளையாட்டுச் செய்திகள்

### தேசிய மட்ட கால்பந்து
## அணித் தெரிவு அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

சமபோச அனுசரணையுடன் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டிக்கு யாழ். மாவட்ட பாடசாலை அணிகளைத் தெரிவு செய்வதற்கான கால்பந்தாட்டப் போட்டிகள் யூன் மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் அறிவித்துள்ளது.

13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகளை யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்குடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டப் போட்டிகள் யூலை மாதம் 5,6,7,8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதில் 2000, 2001இல் பிறந்தவர்களே இப்போட்டித் தொடரில் பங்குபற்ற முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# திறமையான வீரர்களை இனங்காணவே ருவென்ரி - 20

யாழ். மாவட்டத்தில் இருக்கும் திறமையான வீரர்களை இனம் காணும் ஒரு களமே யாழ். பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் முக்கிய நோக்கமென 'அவ பிறன்ஸ்' பவுண்டேசனின் நிர்வாக இயக்குநர் செவ்வேள் தெரிவித்தார்.

பிறவுண் வீதியில் அமைந்துள்ள, அவ பிறன்ஸ் பவுண்டேசன் நிறுவனக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். பிறிமியர் லீக் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட கால யுத்தம் காரணமாக யாழ். மாவட்டம் பாதித்திருக்கின்றது. தற்போது அமைதியான சூழல் நிலவுகின்றது. இந்த வேளைகளில் எமது இளைஞர் சமூகம் போதைப் பொருள் பாவனை, கலாச்சார சீரழிவு போன்றவற்றின் தாக்கங்களுக்குள்ளாகி சீரழியும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் எமது இளம் சமுதாயத்தை மாற்று வழிகளினூடாக வளத்தெடுப்பதற்கு பல்வேறு திட்டங்களை நாம் செயற்படுத்தி வருகின்றோம். அந்தத் திட்டத்தில் ஒன்றுதான் யாழ். பிறிமியர் லீக் போட்டிகள். முதன் முறையாக யாழ். மாவட்டத்தில் யாழ். விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படுகின்றது. இது படிப்படியாக வடக்கில் ஏனைய மாவட்டத்திற்கும் விரிவுபடுத்த எண்ணியிருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இது படிப்படியாக எம்மிடையேயுள்ள திறமையான துடுப்பாட்ட வீரர்க்களை இனம் கண்டுகொள்ள முடியும். அதேவேளை, அவர்கள் சிறப்பாக விளையாடி தேசிய ரீதியில் விளையாடுவதற்கும் வழியேற்படுத்திக் கொள்ளும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டு வினாடி வினா

(யாழ்ப்பாணம்)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டுத் தொடர்பான வினாடி வினாப் போட்டி ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இப்போட்டி தொடர்பான விதி முறைகள் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு: ஒரு அணியில் தலா நான்கு மாணவர்கள் கொண்ட இரு அணிகள் வலயத்திலிருந்து பங்குபற்ற முடியும். வெற்றிபெறும் அணி தொடர்ந்தும் முன்னேறிச் செல்வதுடன் தோல்வி அடையும் அணி இப்போட்டிகளிலிருந்து வெளியேறும்.

வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் அணிகள் மாவட்ட மட்டத்தில் பங்குபற்ற முடியும். மாவட்டத்திலிருந்து முதலிடம் பெறும் அணி மாத்திரமே தேசிய மட்டத்திற்குத் தகுதி பெறும். தேசிய மட்டத்தில் 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 25 அணிகள் பங்குபற்றும். இதற்கேற்ற வகையில் வலய, மாவட்டப் போட்டிகள் தயார்ப்படுத்திக் கொள்ளப்படும். ஒரு போட்டி மூன்று சுற்றுக்களாக நடைபெறுவதுடன் அணி ஒன்றுக்கு மொத்தமாக 100 புள்ளிகள் வழங்கப்படும். புள்ளிகள் விபரம் பின்வருமாறு:

சுற்று 01 : ஒரு சரியான பதிலுக்கு ஐந்து புள்ளிகள் அடிப்படையில் தலா நான்கு பேருக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

சுற்று 02 : ஒரு சரியான பதிலுக்கு 10 புள்ளிகள் அடிப்படையில் தலா நான்கு பேருக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.

வினாவொன்றுக்கு முதற் தடவையில் பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் குறித்த அணி சார்பாக வேறொருவர் பதிலளிக்க முடியும். இதற்காக முதற் சுற்றில் 03 புள்ளிகளும் 2ஆம், 3ஆம் சுற்றுக்களில் தலா ஐந்து புள்ளிகளும் வழங்கப்படும். எனினும் போட்டியொன்றில் அணி ஒன்றுக்கு இவ்வாறு இரு சந்தர்ப்பம் மாத்திரமே வழங்கப்படும். மூன்றாம் சுற்றில் மாத்திரமே எதிரணிக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

வலய மட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளை நடத்தி மாவட்ட ரீதியாக ஒரு குழு தெரிவு செய்யப்பட்டு அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் யூன் மாதம் 1ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும், மாவட்டப் போட்டிகள் பின்வரும் வலயங்களால் நடத்தப்படுதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் - யாழ்ப்பாண வலயம், மன்னார் மாவட்டம் - மன்னார் வலயம், வவுனியா மாவட்டம் - வவுனியா வடக்கு வலயம், முல்லைத்தீவு மாவட்டம் - முல்லைத்தீவு வலயம், கிளிநொச்சி மாவட்டம் - கிளிநொச்சி வலயம் ஆகிய வலயங்களில் மாவட்ட மட்டப் போட்டிகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)



யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கொழும்பு அலுவலகத்தில் சந்தித்தவேளை...

- சங்கர சீவன்





# தமிழ் மக்களுக்குப் புதிய தலைமை

தமிழ் மக்களுக்குப் புதிய தலைமை வேண்டும் என்ற கருத்தை இப்போது அரசியல் விமர்சனக் கட்டுரைகளில் அடிக்கடி காண முடிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தியுற்ற பிரிவினரிடமிருந்து இக் கோரிக்கை வருகின்றது. இந்த அதிருப்தி இரண்டு வகையானது.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை அடைவதற்கான ஆக்கபூர்வ நகர்வுகளைக் கூட்டமைப்பு மேற்கொள்ளாததால் ஏற்பட்ட அதிருப்தி ஒரு வகை.

தனி நாட்டை அடைவதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளாததால் ஏற்பட்ட அதிருப்தி இன்னொரு வகை.

தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையில் தனிநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றிய வேளையில் அக்கோரிக்கையை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கை தலைவர்களிடம் சிறிதளவாவது இருக்கவில்லை. தனிநாடு பற்றிய மாயையில் மக்களை மிதக்க விடுவது அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள உதவும் என்ற நோக்கத்தில், சர்வதேசம் தனி நாடு பெற்றுத் தரும் என்ற வீணான நம்பிக்கையை மக்களிடம் வளர்த்தார்கள். தேசிய இனம், சுயநிர்ணய உரிமை போன்ற அரசியல் பதங்கள் இவ்விடயத்தில் அவர்களுக்குக் கைகொடுத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புலிகளின் பதிலிகளாகச் செயற்பட்ட காலத்தில், புலிகள் தனிநாடு பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையை மக்களிடம் வளர்த்தார்கள். இவர்கள் வளர்த்த நம்பிக்கையின் விளைவாக மக்கள் ஏகப்பட்ட இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் முகங்கொடுத்தமை அண்மைக்கால சோக வரலாறு.

பட்டு வேட்டி ஆசையைக் காட்டிக் கட்டியிருக்கும் கோவணத்துக்கே ஆபத்து ஏற்படுத்தும் அரசியலைத் தான் தமிழர் விடுதலைக்கூட்டணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்ச்சியாகச் செய்து வந்தன. சுதந்திர தமிழீழம் பெற்றுத்தருவதாக இவர்கள் ஊட்டிய நம்பிக்கை உறவினர்கள், உடன் பிறப்புகள், வாழ்புலம், செய்தொழில் என்று இழக்கக் கூடாததையெல்லாம் இழந்து நிற்கும் அவல நிலைக்கு மக்களைக் கொண்டு போய் விட்டிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் சிக்கலாக்கியிருக்கின்றது.

நடைமுறை அரசியலின் நிர்ப்பந்தம் காரணமாகக் கூட்டமைப்புத் தலைமை இப்போது கொஞ்சம் 'அமத்தி வாசிக்கின்றது'. இது இயலாமையின் வெளிப்பாடேயொழியச் சரியான நிலைப்பாட்டுக்குத் திரும்புவதற்கான அறிகுறியல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த 'மாற்றத்தினால்' அதிருப்தியடைந்த குறுந்தேசியவாதிகளும் புதிய தலைமை வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கின்றார்கள். இவர்கள் தங்கள் தனிநாட்டு'முகத்தை' மறைத்துக் கொண்டு தேசியம் என்றும், சுயநிர்ணயம் என்றும் வார்த்தைச் சிலம்பமாடினாலும் உண்மையான நோக்கம் தானாக வெளிப்படுகின்றது.

தனிநாடு பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதே இவர்களின் நோக்கம். கூட்டமைப்புத் தலைவர்களைப் போலவே இவர்களும் சர்வதேசம் பற்றிய நம்பிக்கையை மக்களிடம் வளர்க்கின்றார்கள். தமிழ் மக்களின் நலனும் சர்வதேசத்தின் நலனும் ஒரு வெளியில் சந்திக்கும் நிலையில் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற கருத்து அண்மையில் இவர்கள் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டது. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேசத்தின் நலன் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

ஆட்சி மாற்றம் தானா தமிழ் மக்களின் நலனும்? குறுந்தேசியவாதிகள் கூறும் புதிய தலைமை தமிழ் மக்களை மீண்டும் அழிவுகளுக்கும் இழப்புக்களும் இட்டுச் செல்லும் தற்கொலைப் பாதை.

**“பட்டு வேட்டி ஆசையைக் காட்டிக் கட்டியிருக்கும் கோவணத்துக்கே ஆபத்து ஏற்படுத்தும் அரசியலைத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்ச்சியாகச் செய்து வந்தன. சுதந்திர தமிழீழம் பெற்றுத் தருவதாக இவர்கள் ஊட்டிய நம்பிக்கை உறவினர்கள், உடன் பிறப்புகள், வாழ்புலம், செய்தொழில் என்று இழக்கக் கூடாததையெல்லாம் இழந்து நிற்கும் அவல நிலைக்கு மக்களைக் கொண்டு போய் விட்டிருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வையும் சிக்கலாக்கியிருக்கின்றது.”**

தமிழ் மக்களுக்கு இன்று தேவைப்படுவது அவர்களைப் புதிய பாதையில் வழி நடத்தக்கூடிய புதிய தலைமை. இழப்புகளைத் தவிர்த்துச் சிறப்புகளைப் பெற்றுத் தரக்கூடிய தலைமை. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை நாடி நிற்போர் வேண்டுவது இந்தத் தலைமையையே.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் சுயநிர்ணய உரிமை புதிய கருத்துருவமல்ல. குறுந்தேசியவாதிகள் இது பற்றிப் பேசுவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்வாகச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைத்தது.

ஆண்டியின் கையில் அகப்பட்ட தோண்டியைப் போல, சுயநிர்ணய உரிமை என்ற உயர்ந்த கோட்பாட்டைப் பிரிவினைவாதிகள் கொச்சைப் படுத்தியதன் விளைவாகச் சிங்கள அரசியல்வழிச் சமூகம் அதைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை இன்று உருவாகியிருக்கின்றது.

இந்த நிலையில், சுயநிர்ணய உரிமையை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்று வசனம் பேசுவதால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை.சுயநிர்ணய உரிமையை நடைமுறையில் அனுபவிப்பதற்கு ஏற்ற விதத்தில் செயற்படுவதே புத்திசாலித்தனமானது. இந்த வகையில் செயற்படக்கூடிய தலைமையே தமிழ் மக்களின் இன்றைய தேவை.

பிரிவினை சாத்தியமில்லை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எனவே, தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. சுயநிர்ணய உரிமையின் கீழ் பெறக்கூடிய எல்லா அதிகாரங்களையும் இன்றைய யதார்த்தத்துக்கு அமைவாகப்படிப்படியாகப் பெறுவதற்கான நடைமுறையைப் பின்பற்றுவது தான் சுயநிர்ணய உரிமைக்கு விசுவாசமானசெயற்பாடு. தமிழ் மக்களுக்கு இன்று தேவைப்படுவது இந்தப் பாதையில் பயணிக்கக் கூடிய புதிய தலைமையே.

தமிழ் மக்கள் நியாயமாக எதிர்பார்க்கும் எல்லா அதிகாரங்களையும் ஒரே தடவையில் பெறக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் சில அதிகாரங்களைப் பெற முடியும். இப்பேச்சுவார்த்தையின் மூலம்முழுமையான தீர்வைப் பெறுவது சாத்தியமில்லை.சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலென்ன, ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலென்ன அதன் பாரம்பரிய வாக்கு வங்கியை மையப்படுத்தி வகுக்கும் எல்லைகளுக்குள் நின்றே இனப்பிரச்சினைக்கான தீர்வை அணுக முடியும். இது யதார்த்தம்.

இந்த எல்லைகளைத் தாண்டிச் சென்று முழுமையான அதிகாரப் பகிர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டிய பணியும் தமிழ்த் தலைவர்களுக்கு முன்னால் உள்ளது.

இது சிரமமானது நீண்ட காலம் எடுக்கக் கூடியதுமான நடைமுறையெனினும், முழுமையான அதிகாரப் பகிர்வை அடைவதற்கு வேறு வழி இல்லை.தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் உறவையும் புரிந்துணர்வையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் இதைச் சாதிக்கலாம்.

சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பது அரசாங்கத்தின் வேலை என்றும், தமிழ்த் தலைவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்கக் கூடாது என்றும் யாராவது தர்க்கிக்கக் கூடும். இந்தத் தர்க்கம் அடிப்படையில் தீர்வுக்கு எதிரான குந்தக முயற்சி. முழுமையான தீர்வுக்கு ஆதரவாகச் சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கம் பிரசாரம் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது.

முழுமையான அதிகாரப்பகிர்வுக்குச் சாதகமான அபிப்பிராய அலையொன்று தென்னிலங்கையில்எழுவது அரசாங்கத்தை அவ்வழியில் செயற்பட வைப்பதற்குப் பெரிதும் உதவும். அந்த அலையைத் தோற்றுவிப்பதற்கான முன்கைச் செயற்பாடு தமிழ்த் தலைவர்களைச் சார்ந்தது. ■

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலென்ன, ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலென்ன அதன் பாரம்பரிய வாக்கு வங்கியை மையப்படுத்தி வகுக்கும் எல்லைகளுக்குள் நின்றே இனப்பிரச்சினைக்கான தீர்வை அணுக முடியும். இது யதார்த்தம். இந்த எல்லைகளைத் தாண்டிச் சென்று முழுமையான அதிகாரப் பகிர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டிய பணியும் தமிழ்த் தலைவர்களுக்கு முன்னால் உள்ளது.**

## அடிக்கடி நிகழும் பூமி அதிர்வுகள்

இலங்கையில் ஏற்பட்டு வரும் பூமியதிர்வுகள் குறித்து விசேட ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த வாரத்தில் இரு தடவைகள் பூமி யதிர்வு உணரப்பட்டுள்ளதாக அப்பிரிவின் தலைவர் என்.பி.விஜயானந்த தெரிவித்தார். கடந்த ஞாயிறு அதிகாலையும் நேற்றுமுன்தினம் இரவும் இந்த பூமியதிர்வு நாட்டின் பல பாகங்களில் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இலங்கை பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி பிரிவின் கீழ் செயற்படும் பல்லேகல, ஹக்மன, மஹகனதராவ ஆகிய பூமியதிர்ச்சி மத்திய நிலையங்களில் பூமியதிர்வுகள் பதிவாகியிருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

# யுத்த களத்தில் நின்ற படையினருக்கு உளவியல் வழிகாட்டல் அவசியம்

யுத்தகளத்தில் நெருக்கீடுகளுக்கு மத்தியில் பணியாற்றிய இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்கு போதியளவு உளவியல் வழிகாட்டல் வழங்கப்படுவதில்லை என அவுஸ்ரேலிய பாதுகாப்பு அக்கடமியின் உளவியல் பேராசிரியர் சொமியா ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்ட சகல படைவீரர்களுக்கும் யுத்தத்துக்குப் பின்னர் உளவியல் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தில் ஈடுபட்ட படைவீரர்கள் உளவியல் அழுத்தங்களினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடமையாற்றி திரும்பிய அவுஸ்ரேலிய படைவீரர்கள் பாரியளவில் உளவியல் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், இதே நிலைமை இலங்கைப் படைவீரர்களிடையேயும் காணப்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உளவியல் ரீதியான அழுத்தங்களை எதிர்நோக்கி வரும் படைவீரர்கள் தமது அழுத்தங்களை வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படைவீரர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலயத்தில் கடமையாற்றிய குறிப்பாக முன்னரங்கப் பகுதிகளில் யுத்தம் செய்த படைவீரர்களுக்கு போதியளவு ஓய்வு வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அவர்கள் தங்களது குடும்பங்களுடன் நீண்ட நேரத்தைக் கழிப்பதற்கு போதியளவு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, படையினருக்கு போதியளவு ஆலோசனை வழிகாட்டல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்த நடைமுறையானது திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை என பேராசிரியர் சொமியா ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை விடவும் நிபுணத்துவம் வாய்ந்த உளவியல் நிபுணர்களினால் வழங்கப்படும் ஆலோசனைகளே பொருத்தமானதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உள்நாட்டு இரகசியங்களை வெளிநாடுகளுக்கு வழங்குவது யார்?

## 'திவயின' வெளியிடும் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் இலங்கைக்கு எதிராக அண்மையில் வெளியிடப்பட்ட புதிய விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பொய்யான தகவல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களே வழங்கியதாக அரசாங்கத்திற்கு தெரிய வந்துள்ளது என திவயின தெரிவித்துள்ளது.

14 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில், புலிகள் இரகசியமான இடங்களில் வைத்து கொலை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கொலை செய்யப்பட்ட புலிகளின் பெயர்களை குறித்த அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டாளர்களால் வெளியிட முடியாது போயுள்ளது என சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போரின் போது சரணடைந்த புலிகளைக் கொலை செய்தாக கூறியுள்ள அந்த அறிக்கை, வெள்ளைக் கொடிக் கதையையும் எழுப்பியுள்ளது. அத்துடன் பொலிஸார் கப்பம் பெறுவதாகத் தெரிவித்துள்ள அந்த அறிக்கையில், , அவர்கள் யாரிடம் பெற்றனர் என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இந்த நிலை ல் அமெரிக்காவிற்கு இந்தத் தகவல்களை வழங்கிய 5 அர சார்பற்ற நிறுவனங்களை புலனாய்வு பிரிவினர் அடையாளம் கண்டுள்ளதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

# மன்னார் ஆயருக்கு அச்சுறுத்தல்; கிறிஸ்தவ அமைப்புக்கள் கண்டனம்



(மன்னார்)

மன்னார் ஆயர் மீதான அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். ஆயர் உட்பட பல கிறிஸ்தவ அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அதேவேளை, மன்னார் ஆயர் மீது நடாத்தப்பட்ட தொடர் விசாரணைகள் குறித்தும் நாட்டில் உள்ள அனைத்துக் கிறிஸ்தவ அமைப்புக்கள் பல கடும் விசனமும் கண்டனமும் வெளியிட்டுள்ளன.

மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு யோசேப் அவர்கள் மககளது துன்ப, துயர வேளைகளில் அவர்களுக்காக எப்பொழுதும் குரல்கொடுத்து வருபவர்.

உண்மையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் நீதியும், உண்மையுமே தரும் என்பதனால் நீதிக்காக குரல் கொடுப்பவர். இவரது இந்த அமைதிக்கான முயற்சிகள் சிலதரப்பினரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதும், அதன் காரணமாக அவர் மீது தவறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதும் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது.

இந்நிலையில் மன்னார் ஆயரோடு குருக்கள் துறவியர்களோடும், பொதுமக்கள் அனைவரோடும் நாம் எமது ஒன்றிப்பை வெளிப்படுத்துகின்றோம். அமைதிக்கும் நல்லிணக்கத்திற்குமாக மன்னார் ஆயர் அவர்கள் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங், செயலாளர், தீவக மறைக்கோட்ட குருக்கள் ஒன்றியம், பொதுநிலையினர் கழகம், யாழ். மறைக்கோட்ட முதல்வர் ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம், வன்னி கத்தோலிக்க மக்கள் சார்பில் மறைக்கோட்ட முதல்வர், அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் - யாழ். மறைமாவட்ட குருக்கள் மன்றம் ஆகியனவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

# ஜெனிவாத் தீர்மானத்தின் அமுலாக்கம் தொழில்நுட்ப ஆலோசனை வேண்டாம்

## அடியோடு நிராகரித்தது அரசு

(கொழும்பு)

ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் எதுவும் எமக்கு வேண்டாம் என்று அவற்றை அரசு நிராகரித்து விட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் தொழில்நுட்பசார் ஆலோசனைகளை வழங்குவதற்காக பிரதிநிதிகள் குழுவொன்றை அனுப்பி வைக்க மனித உரிமைப் பேரவை திட்டமிட்டிருந்தது.

எனினும், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.


பிரதிநிதிகள் குழு தொடர்பில் இந்த மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் ஊடாக தகவல் அனுப்பி வைத்திருந்தார்.

ஜூலை மாதமளவில் இந்தப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், வெளிநாட்டு சக்திகளின் தீர்வுத் திட்டத்திற்கு இடமில்லை என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

# நாட்டில் இப்போது பொருளாதார யுத்தம்

## வர்ணிக்கிறது ஜே.வி.பி.



நாட்டின் பொருளாதார யுத்தம் ஒன்று இடம்பெறுவதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்துக்கு பின்னர் பொருளாதார யுத்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், நாட்டை அபிவிருத்தி செய்யும் யுத்தம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாடு அபிவிருத்திக்கு உட்படுத்தப்படுகிறது என்றால், எவ்வாறு விலைகள் அதிகரிக்கின்றன என்றும், எவ்வாறு வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள் ளார்.

அவ்வாறாயின் இங்கு பொருளாதார யுத்தம் ஒன்று நடைபெறுவது உறுதியாகி இருப்பதாகவும், இதனால் வாழ்க்கைச் சுமை அதிகரித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இழந்த காணிகளை மீளப்பெற முடியும்

## வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

யுத்த சூழல் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை இழந்த மக்களுக்கு அவர்களின் காணிகளை மீளப்பெற்றுக்கொடுக்கும் சட்டத்திருத்தமொன்றை மிக விரைவில் அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று முன்தினம் மாலை புதிய நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் காணிகளை குறைந்த விலையில் விற்பனை செய்தவர்கள், யுத்த சூழலின்போது காணிகளை பலாத்காரமாக இழந்தவர்கள் ஆகியோர் தங்களது காணிகளை மீளப்பெற்றுக்கொள்வதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக ஆட்சியுரிமை மாற்றத்தை பெற்றுக்கொள்வது தொடர்பான சட்டத்திருத்தமொன்றை கூடிய விரைவில் நாடாளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கவுள்ளேன்.

கடந்தகால யுத்தசூழல் காரணமாக தங்களது காணிகளை விட்டு இடம்பெயர்ந்தவர்கள், தற்போதைய சூழ்நிலையில் காணிகளை விட்டு பலாத்காரமாக வெளியேற்றப்பட்டவர்கள், அச்சம் காரணமாக மிகக் குறைந்த விலைக்கு காணிகளை விற்பனை செய்தவர்கள் ஆகியோர் காணி உரிமையை இழந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களின் காணிகளையும் சிலர் பின்னர் அடாவடித்தனமாக கைப்பற்றியுள்ளனர். பத்து வருடங்களாக காணியில் இருந்தவர்கள் சொந்தமாக்கிக் கொள்ளும் ஆட்சியுரிமை சட்டத்தின் மூலம், காணிகள் இவ்வாறு இழக்கப்பட்டுள்ளன. இதனை சீர்செய்யும் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

இவ்வாறு காணிகளை இழந்தவர்கள், காணி ஆட்சியுரிமை சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் இழந்த காணிகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியும். யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது. இதன் மூலம் அனைத்துச் சமூகத்திற்கும் நன்மை கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கை சிங்களவர்களது நாடு. அங்கே ஏனையோர் வாழ்ந்துவிட்டுப் போகலாம். ஆனால்

அமெரிக்கா எட்ட நின்று பார்த்தாலே இரத்தம் சொட்டும் என்பார்கள். இப்போது சன்னல் வரை வந்து சரத் பொன்சேகாவை சிறையிலிருந்து விடுதலையாக்கி விட்டார்கள். அரபு நாட்டு மக்களைக் கடந்து ஆப்கானிஸ்தான் வழியாக இலங்கையில் சனநாயகம் கட்டப் போகிறார்களாம் அமரிக்கர்கள். அதுவும் ரணிலின் ஆதரவோடு, சரத் பொன்சேகாவை வைத்து சனநாயகம் செய்யப்போகிறார்களாம்.

# "வாழும் மண்" கப்பலாவது வருமா?

- புலம்பெயர் இணையக் கட்டுரை ஒன்றிலிருந்து.



எந்தச் சந்தர்ப்பத்திலும் தேவையற்ற விடயங்களைக் கேட்பதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம்" என்ற மகா வார்த்தைகளை உதிர்த்தவர் சரத் பொன்சேகா. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - காய் நகர்த்தும் கோட் சூட் பேர்வழிகள் - தேர்தலுக்காக கூட்டுச் சேர்ந்து தமிழ்த் தேசியம் பேசிய அதே சரத் பொன்சேகா.

முள்ளிவாய்க்கால் விழா, மாவீரர் விழா ஆகியவற்றைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட புலம் பெயர் அரசியல் ஜாம்பவான்கள் இதற்கு ஒன்றும் பேச மாட்டார்கள், ஏனென்றால் அவர்களுக்கு "ஹில்லாரி கிலி" பிடித்திருக்கிறது.

சரத் பொன்சேகாவையே அமெரிக்க சனநாயகம் விடுதலை செய்து சமாதானி பட்டம் கொடுத்தால் பிறகு போர்க்குற்றம் பற்றி அமெரிக்கா பேசியதெல்லாம் பம்மாத்துத் தானே? சரத்தை விடுத்ததோடு அமெரிக்காவின் போர்க்குற்றப் பேச்சுக்களும் முடிவுக்கு வந்துவிட்டது.

புலம் பெயர் நாடுகளில் தமிழ் ஈழம் பெற்றுத் தருவோம் என மார்தட்டிய அமைப்புக்கள் யாராவது இது குறித்துப் பேசியிருக்கிறார்களா? இது ஒரு விமர்சனக் களமாக, சோதனைக் காலமாக, தங்களின் நேர்மையையும் உண்மைத் தன்மையையும் நிறுவுவதற்கு உரிய நேரமாக புலம் பெயர் அமைப்புக்கள் கருத்தில் கொள்ளத் தயாரா?

"பணத்திற்காகவும், பகட்டிற்காகவும், பதவிக்காகவும் மட்டுமே புலம் பெயர் அமைப்புக்கள்" என்பதை பொய்யென நிறுவ வேண்டுமானால்,

**1.** சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளையும் சரத் பொன்சேகாவைப் போன்று விடுதலை செய்யக் கோரிப் போராட்டம் நடத்துங்கள்.

**2.** சரத் பொன்சேகாவைப் போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுத்துமாறு போராட்டம் நடத்துங்கள்.

**3.** வன்னி மக்களுக்கு உதவிகள் சேகரித்து "வாழும் மண்" கப்பலை அனுப்ப முன்வாருங்கள்.

இவற்றை நீங்கள் நிராகரித்தால் நீங்கள் மக்கள் சார்ந்தவர்கள் அல்ல, நீங்கள் பெரும்பாலோர் வாழுகின்ற மேற்கு நாடுகளைச் சார்ந்தவர்களே என்பது உறுதியாகிவிடும். உங்கள் சொந்த நலனுக்காக மேற்கின் கொலை காரச் சமூகத்தோடு கைகோர்த்துக் கொண்டிருப்பதை ஒப்புக் கொண்டவர்களாவீர்கள்.

இப்போ கேள்வி இதுதான், உங்கள் செயற்பாடுகளில், நாட்டில் இன்னும் தலைநிமிர்த்த முடியாமல் வாழ்வுத் தேவைகளுக்காக ஏங்கும் மக்கள் மீதான அக்கறை ஏதும் இருக்கிறதா? இல்லை உங்கள் சொந்த நலன் சார்ந்து வியாபார அரசியலைச் செய்து கொண்டிருக்கிறீர்களா?

தமிழ்நாட்டின் ஐந்து சூப்பர் ஸ்டார்களுடன் இணைந்து நடிக்கும் பெருமை பெற்றவர், டி.ஆர். ராஜகுமாரி. தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பா ஆகியோரை அடுத்து மூன்றாவது சூப்பர் ஸ்டாராக உருவானவர் டி.ஆர்.மகாலிங்கம். அவர் நடித்த ஸ்ரீவள்ளி, நாம் இருவர், ஞானசவுந்தரிஆகிய படங்கள் மாபெரும் வெற்றி பெற்று, அவரை சூப்பர் ஸ்டார் அந்தஸ்துக்கு உயர்த்தின.

எனவே, மகாலிங்கத்தையும், டி.ஆர். ராஜகுமாரியையும் ஜோடியாக நடிக்க வைத்து "இதய கீதம்" என்ற படத்தை ஜோசப் தளியத்

# டி.ஆர்.ராஜகுமாரி

தயாரித்தார். (மகாலிங்கத்தைவிட ராஜகுமாரி மூத்தவர்).

இந்தப் படம் சூப்பர் ஹிட்டாக அமையவில்லை என்றாலும் ஓரளவு வெற்றிப்படமே. பிறகு கே.ஆர். ராமசாமியுடன் "விஜயகுமாரி" (1950) என்ற படத்திலும், சின்னப்பாவுடன் "வனசுந்தரி" (1951)

அந்தக் காலத்தில் வெற்றிக்கொடி கட்டிய படம், "ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி!" இப்படத்திற்கு திரைக்கதை, வசனம் எழுதியவர் கவிஞர் பாரதிதாசன். இந்தப் படத்தின் வெற்றி, சுயமரியாதை வட்டாரத்தை வெகுவாகவே சூடேற்றி விட்டது. புராண, இதிகாசங்களை முழுமையாக எதிர்க்கும் பாரதிதாசன், இது மாதிரியான படங்களுக்குப் பணியாற்றலாமா என்று எதிர்ப்புக்குரல் எழுப்பினர். அதற்கு பாரதிதாசன், "மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுவரும் திரைப்படத் துறையில், ஒரு புது யுக்தியை ஏற்படுத்தியிருக்கிறேன். பிராணநாதா, ஸ்வாமி, சஹியே, தவஸ்ரேஷ்டரே போன்ற சொற்களை நீக்கி, அழகுத் தமிழில் அத்தான், தோழி, குருவே என்று அழைக்க

# ஒவ்வொரு உயிரும், தான் கண்ட ஒளியில்...


.... அவருடைய முழுக் கடிதத்தையும் நான் இங்கே தரப்போவதில்லை. அதன் சுருக்கத்தை மட்டும் தருகிறேன். "பெருமகனே" என்னும் அலங்காரமான சொல்லுடன் அவருடைய கடிதம் தொடங்குகிறது. வடமொழிப் பண்டிதர்கள் சொற்களை வாரி வழங்குவதில் வள்ளல்கள் என்று எண்ணிச் சிரித்து அதைப் படித்தேன்:

"நீங்கள் உங்கள் நண்பர் யசவந்த ராயரைப் பற்றி அறிவதில் காட்டும் ஆர்வம் மிகவும் இயல்பானதுதான். நானும் எனக்குத் தெரிந்ததைச் சொல்ல வேண்டுவது பொருத்தம்தான்! ஆனால்? அவரை நான் தெரிந்து கொண்டேன் என்னும் ஆணவம் எனக்கு இல்லை. கருத்துப் போக்கில் அவர் வடதுருவம் என்றால், நான் தென்துருவம்.

நான் நம்பிக்கை மிகுந்த வைதீகன். பழைய பரம்பரையில் வந்தவன், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன்.

உங்கள் நண்பரை நீங்கள் அறிவீர்கள்"

அவர் தம்முடைய நம்பிக்கையையே தோண்டியெடுத்து, தட்டிப் பார்த்து எடைபோட வல்லவர். வாதத்தில் -



என்னைச் சீண்டி, கோபமூட்டி, "நீங்கள் பண்டிதர், தந்தை நட்டு வளர்த்த ஆலமரத்தை அணைத்துக் கொள்கிறவர்களைப் போல ஆயிரம் இரண்டாயிரம் வருடங்களாக வேரும் கிளையும் கொம்பும் நிறைந்த மரத்தை விடுவதில்லை என்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறவர். சிந்திக்கத் தொடங்கினால் அல்லவா உங்களுக்குக் கவலை? என்று என்னைப் பார்த்துக் கேலி செய்பவர்".

எவ்வளவோ விவாதங்கள் எங்களிடையே ஒவ்வொரு நாளும் நடந்து வந்தன. அதனாலேயே அவர் வடதுருவம் நான் தென்துருவம் என்று சொன்னேன். எனக்கு வியப்பை அளித்த மற்றொன்று என்னவென்றால், நான் இந்த ஏழ்மையிலும் தர்ம சாஸ்திரத்தைப் பற்றி ஒரு நூல் எழுதுவதைக் கண்ட

அவர், "எழுதுங்கள், அப்படித்தான் எழுத வேண்டும்" என்று ஊக்கம் ஊட்டினார் என்பதுதான்.

"யசவந்தரே, உங்கள் போக்கு எனக்குப் புரியவில்லை. என் வழியை நீங்கள் ஒப்புக்கொள்வதில்லை. தர்ம சாஸ்திரங்கள் ஆயிரமாயிரம் மக்களின், பல்வேறு நூற்றாண்டுகளின் நம்பிக்கை என்கிறீர்கள். அதையே எழுதுங்கள் என்றும் சொல்கிறீர்கள்!" என்று என் வியப்பைத் தெரிவித்தேன். அவர் என்னைக் கேலி செய்வார் என்றே நினைத்தேன். ஆனால் அவர் கேட்டார்: "நண்பரே, நீங்கள் நானல்ல அல்லவா?"

"அதெப்படி முடியும்?" என்றேன் நான்.

"அதற்காகவே நீங்கள் எழுத வேண்டும். என் நம்பிக்கை எனக்கு, உங்களுடையது உங்களுக்கு. நீங்கள் சொல்வதே உண்மையாக இருக்கலாம், நான் சொல்வதே உண்மையாகவும் இருக்கலாம். அல்லது இருவருமே தவறாகவும் இருக்கலாம்... அல்லது நம்முடைய எண்ணப்போக்கில் உண்மையும் பொய்யும் கலந்தும் இருக்கலாம்."

"இருக்கலாம்"

"ஒப்புக் கொள்கிறீர்களா?"

"ஆம், ஒப்புக் கொண்டேன்"

"அப்படியிருந்தாலும் உங்கள் வாழ்க்கை, உங்கள் சிந்தனை நமது மக்களுக்கு கிடைக்க வேண்டும். நாம் எவ்வளவுதான் அறிஞர்களாக இருந்தாலும், நம் கருத்து எவ்வளவுதான் சரியாக இருந்தாலும், ஒவ்வொரு உயிரும், தான் கண்ட ஒளியில் நடந்து செல்வதே நியாயம். நம் அனைவரின் ஒருங்கிணைந்த வாழ்விற்கு நாம் செலுத்த வேண்டிய கடன் அது. "இதுவே உறுதி, அதுவே உறுதி" என்று மற்றொருவரின் கழுத்தை நெரித்து, பேச்சைக் கட்டுப்படுத்துவது சமுதாயத்தையே அழிப்பதாகும்" என்றார்.

எனக்கு அவருடைய பேச்சைக் கேட்டு மிகவும் வியப்பு ஏற்பட்டது. படித்தவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த எங்களிடையேயும், நமது ஆசிரியர்கள் என்று பெயர் பெற்றவர்களிடையேயும், தொடக்கத்தில் இருந்து வந்த குறைபாடு என்னவென்றால் - தான் கூறும் வாதமே சரியானது, தான் கூறிய பொருளே உண்மை என்பதுதான். மற்றதெல்லாம் மூடர்கள் நிரம்பிய உலகம், அறிவற்றவர்களுடைய கூட்டம்

- என்னும் எண்ணம் பரம்பரையாக வளர்ந்து வந்திருக்கிறது. ஆயிரம் கோடி கருத்துக் குழப்பங்களில், உண்மை தனது ஆற்றலினாலேயே நிலைத்து நிற்க வேண்டுமே தவிர, நம் அதிகாரத்தினாலோ, எதிரியின் வாயை அழுத்தி மூடி விடுவதினாலேயோ, குதர்க்கத்தினாலேயோ நிலைத்து நிற்காது என்று எனக்குத் தோன்றியது. அந்த விஷயத்தில் என் கண்ணைத் திறந்தவரே யசவந்தர்தான்.

இன்னும் என்ன எழுதுவது அவரைப் பற்றி? அவர் மிகவும் பெரிய மனிதர். கண்ணில் தெரிவது மட்டுமல்ல, அவருடைய உருவம். நான் காண முடியாத அளவு உயர்ந்து நின்ற உருவம் அவருடையது.

**- சிவராம காரந்தின் "அழிந்த பிறகு" நாவலில்.**

# உபரிப் பூக்கள்



உதவி கேட்டு வந்த நண்பருக்குச் சொன்ன அறிவுரை:

நமக்கொரு பிரச்சினை என வரும்போது அதனை உடனடியாகத் தீர்ப்பதில்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் இன்னொருவரிடம் போய் உதவி கேட்கும் வரை காத்திருக்கக் கூடாது. மகிழ்ச்சியான குடும்பங்கள் ஒரே மாதிரியாக மகிழ்ச்சியாக இருக்கின்றன என்றும் வருத்தமான குடும்பங்கள் தனித்தனி பாணியில் வருத்தமாக இருக்கின்றன என்றும் டால்ஸ்டாய் ஒரு நாவலில் எழுதுவார். அது போல நம் பிரச்சினைகள் நம்முடைய தனிச் சொத்துகள். சேச்சே, இல்லையே, இது எனக்கான பிரச்சினையல்லவா என்று இன்னொருவர் அதை வந்து உரிமை கொண்டாட முடியாது. நம் பிரச்சினைகள் நம்முடைய சொந்தக் குழந்தைகள், நம் தோட்டத்தில் மலர்ந்த பூக்கள். அவற்றை நாமேதான் சூடிக்கொள்ள வேண்டும்.


■ ■ ■

என் மகன் கெட்ட வார்த்தை பேசக் கேட்டு

ட்டார்களுடன்
றவர், டி.ஆர்.
பி.யு.சின்னப்பா
ருப்பர்
பிங்கம்.
ர்.
பரும் வெற்றி
ந்தஸ்துக்கு
ஆர்.
க வைத்து
சப் தளியத்

# குமாரி

ராஜகுமாரி
அமையவில்லை
பிறகு கே.ஆர்.
)) என்ற
ந்தரி" (1951)



என்ற படத்திலும் ராஜகுமாரி நடித்தார்.

பாகவதர் விடுதலையாகி வெளிவந்தபின், நடித்த "அமர கவி" (1952) என்ற படத்தில் ராஜகுமாரி ஜோடியாக நடித்தார். விடுதலை யான பிறகு பாகவதர் நடித்த ஐந்து படங்களில் ஓரளவு நன்றாக அமைந்தது இந்தப் படம் தான்.

சென்னை தியாகராய நகரில் தன் பெயரிலேயே ஒரு தியேட்டரைக் கட்டினார், ராஜகுமாரி. தமிழ் நடிகைகளில் சொந்தமாகத் தியேட்டர் கட்டிய ஒரே நடிகை ராஜகுமாரி தான். இதை ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசன் திறந்து வைத்தார்.

தம்பி டி.ஆர்.ராமண்ணாவுடன் சேர்ந்து "ஆர்.ஆர். பிக்சர்ஸ்" என்ற படக் கம்பெனியை ராஜகுமாரி தொடங்கினார். இந்த கம்பெனியின் முதல் படம் "வாழப்பிறந்தவள்". அதில் ராஜகுமாரி நடித்தார். ராமண்ணா டைரக்ட் செய்தார். படம் சுமார் ரகம்.

1954இல் எம்.ஜி.ஆரையும், சிவாஜி கணேசனை யும் ஒன்றாக நடிக்கச் செய்து, "கூண்டுக்கிளி" என்ற படத்தைத் தயாரித்தார். இதில் தனக்குப் பொருத்தமான வேடம் இல்லை என்ற காரணத்தால் பி.எஸ்.சரோஜாவையும், குசலகுமாரி யையும் நடிக்க வைத்தார். ராமண்ணா டைரக்ட் செய்தார்.

இரு மாபெரும் ஸ்டார்கள் நடித்த இப்படம் படுதோல்வி அடைந்தது.

தோல்வியைக் கண்டு துவண்டு விடாது ராஜகுமாரி, அடுத்த படத்தை வெற்றிகரமாகத் தயாரிக்க, தம்பியுடன் தீவிரமாக ஆலோசித்தார். "குலேபகாவலி" கதையை மசாலாப் படமாகத் தயாரிக்க முடிவு செய்தனர். எம்.ஜி.ஆர். கதாநா யகன். அவருக்கு மூன்று ஜோடிகள். அவர்களில் ஒருவராக ராஜகுமாரி நடித்தார். படம் பெரிய வெற்றி பெற்று, வசூலைக் குவித்தது.

பாகவதர், சின்னப்பா, மகாலிங்கம், எம்.ஜி.ஆர். என்ற நான்கு சூப்பர் ஸ்டார்களுடன் நடித்த ராஜகுமாரி, சிவாஜி கணேசனுடன் "தங்கப்பதுமை"யில் சேர்ந்து நடித்தார்.


ஐந்து சூப்பர் ஸ்டார்களுடன் இணைந்து நடித்தவர் என்ற பெருமை முதன் முதலாக ராஜகுமாரிக்குக் கிடைத்தது. பின்னர் இந்தப் பெருமையை பி.பானுமதி பெற்றார்.

1963இல் "வானம்பாடி" படத்தில் ராஜகுமாரி நடித்தார். அதுவே அவருடைய கடைசிப் படம். அதன்பின் படங்களில் நடிக்கவில்லை. தி.நகரில் உள்ள தன் வீட்டில் ராஜகுமாரி தன் வாழ்க்கையின் பின்பகுதியை அமைதியாகக் கழித்தார். விழாக்களில் கலந்து கொள்வதில்லை. பத்திரிகையாளர்களை சந்திப்பதில்லை.

காலப்போக்கில், தன்னுடைய "ராஜகுமாரி" தியேட்டரை விலைக்கு விற்று விட்டார். அது பலருடைய கை மாறி, பின்னர் இடிக்கப்பட்டு, இப்போது வணிக வளாகமாகக் காட்சி அளிக்கிறது.

திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்த ராஜகுமாரி 20-09-1999இல் தமது 77ஆவது வயதில் காலமானார்...

# பாரதிதாசன்



வைத்திருக்கிறேன். அசுரர்களாகக் காட்டப்பட்டவர்களை, தமிழறிந்த இரக்க சிந்தை உடையவர்களாகக் காட்டியிருக்கிறேன். இந்தத் தொடக்க நிலையில் இதைத்தான் செய்ய முடியும். இன்னும் முன்னேறி, முற்போக்குக் கருத்துக்களுக்கு சிறப்பான இடத்தைப் பிடித்துத் தருவேன். தேவையில்லாமல் என்னை யாரும் தவறாகப் புரிந்து கொண்டு எதிர்க்க வேண்டாம். போய் வேற வேலையைப் பாருங்கப்பா...." என்றாராம்.

# கம்பதாசன்



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோருக்கு முன்னதாக, புகழ்பெற்ற பாடலாசிரியராகத் திகழ்ந்தவர் கவிஞர் கம்பதாசன். இவருடைய இயற்பெயர் அப்பாவு. சிறு வயதிலேயே பாடல்கள் எழுதும் திறமை பெற்றிருந்தார் கம்பதாசன். ஆனால், ஜெமினி ஸ்டுடியோவில் அவருக்குக் கிடைத்த வேலை என்னவோ மோல்டர் வேலைதான். மோல்டர் வேலை செய்து கொண்டே நாடகங்களிலும் நடித்து வந்தார். "ஸ்ரீனிவாச கல்யாணம்" என்ற படத்தில் பாடலாசிரியராக அறிமுகமானார். பின்னர், 1940இல், "வேணுகானம்" படத்திற்கு, அனைத்துப் பாடல்களையும் எழுதினார். அதன்பின், பிசியான பாடலாசிரியரானார். கருத்தாழமிக்க பாடல்கள், அவருக்கு நற்பெயரை அன்று வாங்கித் தந்தது. ஞானசவுந்தரி, மங்கையர்க்கரசி ஆகிய படங்களில் கம்பதாசன் எழுதிய பாடல்கள் காலம் கடந்தும், அவரது பெயரை இசைத்துக் கொண்டிருக்கின்றன. கேரள நாட்டிய நட்சத்திரம் சித்ரலேகாவை காதலித்து, திருமணம் செய்து கொண்ட போதிலும், அவரது இல்லற வாழ்க்கை இனிமையாக அமையவில்லை. அதனால், மது அருந்தும் பழக்கம் ஏற்பட்டது. பின்னர், மது அவரை அருந்தத் துவங்கியது. 1973இல், சென்னை அரசு மருத்துவமனையில் அனாதைபோல் இறந்து போனார் கம்பதாசன்.

# கசகறணத்துக்கு தமுஎகச விருது



விமல் குழந்தைவேலுவின் "கசகறணம்" நாவலுக்கு 2011ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் (தமுஎகச) வழங்கும் நாவலுக்கான விருது கிடைத்துள்ளது! இது விமலின் இரண்டாவது நாவலாகும். முன்னர் அவருடைய "வெள்ளாவி" என்ற நாவல் வெளிவந்திருந்தது. வெள்ளாவி இலங்கையில் அதிக சர்ச்சைகளை உருவாக்கிய நாவலாகவும் இருந்தது.

கசகறணம், இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைக் கதைக் களமாகக் கொண்ட நாவல். இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் கதை. இந்தச் சமூகங்கள் கடந்த 30 ஆண்டுகளுள் எப்படியான அரசியற் பொறிகளுக்குள் சிக்குண்டு சிதைந்தனர் என்பதையும் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தின் அடையாள மாற்றங்களையும் சாட்சியமாகப் பதிவு செய்கின்ற நாவல்.

இந்த நாவலில் விமல் அறிமுகப்படுத்துகிற பாத்திரங்களும் அவர் விவரிக்கின்ற கதைக்களமும் மனதில் எழுப்புகின்ற தோற்றங்கள் அதிக வலுடையன. நாவலின் அடியோட்டமாகச் சித்திரிக்கப்படுகின்ற சமூக இணைவு பற்றிய ஆவல் முக்கியமானது. எப்படி மனிதர்கள் தங்களுக்குள் இடைவெளிகளை உருவாக்கிக் கொள்கிறார்கள்? அவர்களுடைய உடலையும் விட, அதனுடைய தேவைகளையும் விட அவர்களுக்குள் ஊறிய[illegible]வும் அரசியலும் பிற கருத்துகளும் எவ்வாறெல்லாம் அவர்களைச் சிதைத்து விடுகின்றன என்பதை விமல் மிக நுணுக்கமாக அவதானித்துள்ளார். அதை எங்களுக்கும் அவர் பகிர்கின்றார்.

போரும் இனமுரணும் சப்பிச் சிதைத்த வாழ்க்கை வரலாறுகள் எண்ணற்றவை. இனங்களுக்கிடையிலான அன்பும் பிணைப்பும் கூட இனமுரண்களால் சிதைக்கப்பட்டன. இவற்றையெல்லாம் ஒரு மனிதநேயப் பார்வையுடன் அணுகி, தவறுகளைத் தொடர்ந்தும் அனுமதிக்காமல் இழந்து போன இனிய வாழ்வை மீளவும் புதிய தளத்தில் பலமாக நிர்மாணிக்க வேணும் என்று விமல் உரைப்பது முக்கியமானது.

கிழக்கு மாகாணத்தின் பேச்சுவழக்கில் - குறிப்பாக அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் உரையாடல் வழக்கில் அவர்களையே அடையாளப்படுத்தும் பாத்திரங்களின் மூலமாக இந்தக் கதை- களைச் சொல்கிறார் விமல்.

அண்மையில் வெளியாகியிருக்கும் ஈழத்து நாவல்களில் முக்கியமான ஒரு நாவல் என கசகறணத்தைத் துணிந்து கூறமுடியும்.

இந்த நாவலைத் தேர்வு செய்திருக்கிறது தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் (தமுஎகச) ஆண்டு தோறும் அந்தந்த வருடத்தில் வெளியான கலை இலக்கியப் படைப்புகளுக்கு விருது வழங்கி வருகிறது.

கவிதை, சிறுகதை, நாவல், தமிழ் வளர்ச்சிக்கான ஆய்வு, மொழிபெயர்ப்பு, விளிம்புநிலை மக்களுக்கான எழுத்துகள் மற்றும் படங்கள், குறும்படங்களுக்கு என துறைசார் விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு நாவலுக்கான சிறந்த விருது, விமல் குழந்தைவேலுவின் கசகற- ணம் நாவலுக்கு கிடைத்துள்ளது.

இந்த விருது விமல் குழந்தை வேலுக்குக் கிடைத்துள்ளது என்பதை விட அவர் பாத்திரமாக்கிய மனிதர்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் அந்தப் பண்பாட்டுக்கும் கிடைத்த விருது என்றே குறிப்பிட வேண்டும். மெய்யான தளத்தில் மெய்யான மனிதர்களைக் கொண்டு அவர்களின் நினைவுகளில் இருந்து ஊறிய சாற்றை எடுத்துப் படைத்திருக்கும் நாவல் என்ற வகையில் இந்த விருது அந்தக் களத்துக்கும் அங்குள்ள மனிதர்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கைக்கும் அந்த நினைவுகளுக்கும் உரியதே. இந்த விருதை அப்படித்தான் வாசிக்க வேண்டியுள்ளது.

விமல் இந்த விருதை இப்படித்தான் வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

கடந்த 2011ஆம் ஆண்டு வெளிவந்த படைப்புகளையும் படைப்பாளிகளையும் தேர்வு செய்யும் நடவடிக்கை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கென நியமிக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கௌரவம் பெறுகின்ற படைப்பாளிகளாக பின்வருவோர் அமைந்துள்ளனர்.

1. கவிஞர் எச்.ஜி.ரசூல்
2. எழுத்தாளர் அழகிய பெரியவன்
3. சிறுகதை ஆசிரியர் ஜாகீர் ராசா
4. ஆய்வாளர் நா.மம்மது
5. மொழிபெயர்ப்பாளர் சுப்பாராவ்
6. இயக்குனர்களான பாரதி கிருஸ்ணகுமார் - விக்னேஸ்வரன் ஆகியோர்.

இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் முக்கியமான படைப்பாளிகள். சமூகப் பற்றாளர்கள். விடுதலை விரும்பிகள். மனிதநேயவாதிகள்.

ஆனால், தமிழகத்துக்கு வெளியே கசகறணம் நாவல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது முக்கியமானது. அம்பாறை மாவட்டத்தில் கோளாவில் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த திரு. விமல் குழந்தைவேல் தற்போது லண்டனில் வாழ்ந்து வருகிறார். கோளாவில் பிரதேசம் பல படைப்பாளிகளைத் தந்திருக்கிறது.

விமல் குழந்தைவேலுக்கும் கசகறணத்துக்கும் வாழ்த்துகள்.

- மாணிக்க வாசகன்.

---

அவனைக் கண்டித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் வாசகர் ஒருவர் (எனக்கு நண்பர்களைவிட வாசகர்கள் மிகுதி) என் வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தார். நான் என் மக- னைத் திருத்துவதைப் பார்த்து அவருக்கு ஆச்சரியம் பற்றிக்கொண்டது. நான் மட்டும் பேச்சிலும் எழுத்திலும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது சரியா என்பது அவர் கேள்வி.

நான் "வாங்க வாங்க" என வரவேற்ற படியே அவருக்கு என் குழந்தை வளர்ப்புக் கொள்கையை விளக்கினேன். கெட்ட வார்த்தை மட்டுமல்ல, பொய் பேசுதல், உண்மை பேசுதல், சூது - வாது ஆகியவை மரணம் போல குழந்தைகள் செய்யக் கூடாத காரியங்கள். இவைகளை நாம் செய்கிறோம் என்றால் நமக்குத் தெரியும் நாம் ஏன் செய்கிறோம் என்று.. ஏண்டா இப்படிச் செய்தாய் என்று கேட்கப்படும்போது மனசாட்சிக்கு விரோதமாகவோ விரோதமில்லாமலோ விளக்கம் கொடுக்க நமக்குத் தெரிகிறது. குழந்தைகளுக்குத் தெரியுமா? கேட்டவர் தெளிந்தார்.

✹ ✹ ✹

ஒரு ஆண் திருமணத்திற்குப் பின்னர் பெண் வெறுப்பாளன் (misogynist) ஆகவில்லை என்றால் அதற்கு மூன்று காரணங்களே இருக்க முடியும்:

1. அவன் மணந்திருப்பது இன்னொரு ஆடவனை.
2. திருமணமானவுடன் மனைவி இறந்துவிட்டாள்.
3. திருமணமானவுடன் அவனே இறந்துவிட்டான்.

✹ ✹ ✹

"ஒரு லோட்டா ரத்தம்" நெடுங்கதைக்காக ஓரான் பாமுக்கையோ விஸ்லாவா சிம்போர்ஸ்காவையோ அல்லது இருவரை யுமோ சாகடிக்கும்படி வாசகர்கள் தொடர்ந்து மின்னஞ்சலும் குறுஞ்செய்தியும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் சாக வேண்டிய வெளிநாட்டவர்கள் என பெரிய பட்டியல்களைத் தட்டச்சு செய்து அனுப்புகிறார்கள். உங்கள் ஆசையும் தர்ம சீற்றமும் எனக்குப் புரிகின்றன. ஆனால்



நாவலாக எழுதினால்கூட அத்தனை பேரையும் ஒவ்வொருவராக சாகடிப்பது படிப்பவர்களுக்கு அலுப்பூட்டக்கூடியதாக இருக்கும். மொத்தமாக ஒரே சமயத்தில் எல்லோரையும் தீர்த்துக்கட்டுவது சில தர்க்கப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். சிம்போர்ஸ்காவை சாகடிக்க விரும்புபவர்களே, என்னால் அவரைக் கொல்ல முடியாது. நீங்கள் வேண்டுமானால் அவர் கவிதைகளை தொடர்ந்து மொழிபெயருங்களேன். அல்லது அஞ்சலிக் கட்டுரை எழுதுங்களேன். ஒரே சமயத்தில் சாகவும் அடித்து அஞ்சலியும் எழு- திய மாதிரி இருக்கும்.

- பேயோன் வலைத்தளத்திலிருந்து.

# 'செழிப்பான இலங்கை; வளமான நாடு'

# கிளிநொச்சியில் கண்காட்சி

## அமைச்சர் டக்ளஸ் தொடக்கி வைத்தார்



(கிளிநொச்சி)

"செழிப்பான இலங்கை வளமான தாய் நாடு" என்னும் தொனிப் பொருளிலான வாழ்வெழுச்சி குடிசைக் கைத்தொழில் கண்காடசியை பாரம்பரிய கைத்தொழில்கள் மறறும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்தில வாழ்வெழுச்சி திட்ட கண்காட்சி நேற்று முன்தினம் தினம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

41 காட்சிக் கூடங்கள் அமைககப்பட்டு அங்கு உலோகம், துணி, தோல், மரம் உள்ளிட்டவற்றால் ஆக்கப்பட்ட பொருட்களும் உணவு மற்றும் உணவல்லாத பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

காட்சிக் கூடங்களுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் உள்ளடங்கிய குழுவினர் ஆக்கப் பொருட்களையும் தொழில் உபகரணங்களையும் பார்வையிட்டதுடன் அவை தொடர்பில் துறை சார்ந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

சிறிய மற்றும் நடுத்தரக் குடிசைக் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அமுலாக்கத்துடன் நாடளாவிய ரீதியில் 13 மாவட்டங்களில் வாழ்வெழுச்சி கண்காட்சி ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அமுலாக்கத்துடன் மேலும் 04 அமைச்சுக்களும் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் நடாத்தி வரும் வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக சிறிய மற்றும் நடுத்தரக கைத்தொழில் துறைகள் மென்மேலும் மேம்பாடடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெறற ஆரம்ப நிகழ்வில் வாழ்வெழுச்சித் திட்டம் தொடர்பான விளக்கவுரையினை பாரம பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பிரதம விருந்தினர் உரையினை அமைச்ர் டக்ளஸ் தேவானநதா அவர்கள் நிகழ்த்தினார்.

இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் கமகே, ஈ.பி.டி.பி.யின் கிளிநொசசி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் உள்ளிட்ட துறை சார்நத பலரும் கலநதுகொண்டனர்.

## திரையுலக நட்சத்திரங்கள் இலங்கை விஜயம்



(கொழும்பு)

இந்திய பொலிவூட் நட்சத்திரங்களான விவேக் ஒபராய், பிரீத்தி சிந்தா ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

கண்டியிலுள்ள போகம்பரை மைதானத்தில் நடைபெற வுள்ள கார்ல்ரன் சுப்பர் 7 ரக்பி போட்டியை கண்டுகளிப் பதற்காகவே இவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

## தமிழரசுக் கட்சிக்கு எதிராக மட்டுநகரில் கறுப்புக் கொடி


மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் மாநாட்டைக் கண்டித்து மட்டக்களப்பு நகரின் ஒரு சில இடங்களில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன், இம மாநாட்டிற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் துண்டுப்பிரசுரங்களும் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் கூட்டமைப்பு அதிருப்தி யாளர்களெனத் தெரிவித்து இத்துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. கறுப்புக் கொடிகள் மட்டக்களப்பு நகரின் சந்தி சுற்றுவட்டம் மற்றும் நகரின் வீதிகளிலும் கட்டப்பட்டுள்ளன.

## மறுபரிசீலனை வேண்டும் இலங்கையர் சார்பாக கோரிக்கை

(கொழும்பு)

பிரித்தானியாவிலிருந்து இலங்கையர்களை நாடு கடத்துவது தொடர்பான விதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரி, அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



பிரித்தானிய தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்திரசர்மாவினால் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள இலங்கை அகதிகளுள் ஒரு தொகுதியினர் இந்த மாதம் 31 ஆம் திகதி அங்கிருந்து நாடு கடத்தப்படவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே நாடு கடத்தல் சட்டத்தில் மாற்றம் செய்யவேண்டும் எனக் கோரி யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# அளவுக்கதிகமான நுகர்வு; தடுத்து நிறுத்த புதிய சட்டம்

## சுகாதார அமைச்சு களமிறங்குகிறது

(கொழும்பு)

சந்தையில் உள்ள உணவுப் பொருட்களில் சீனி மற்றும் உப்பின் அளவு தொடர்பில் புதிய சட்டதிட்டங்களை அமுலாக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளொன்றுக்கு ஒருவருக்கு 5 கிராம் உப்பு தேவைப் படுகின்ற நிலையில், இலங்கையில் ஒருவரால் சராசரியாக 10 தொடக்கம் 15 கிராம் உப்பினை தாம் உட்கொள்ளும் உணவில் சேர்த்துகொள்ளப்படுகிறது.

இதேவேளை தனி ஒரு நபருககு நாளாந்தம் 10 தொடக்கம் 12 கிராம் சீனி தேவைப்படுகிறது.


எனினும் இந்த அளவு நாளாந்தம் 60 கிராமை தாண்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நீரிழிவு, இருதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நோய்களால் இலங்கையில் மாத்திரம் நாளாந்தம் 600 பேர் மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் நீரிழிவு நோயினால் வருடாந்தம் 100 பேர் தமது கால்களை இழக்கின்றனர்.

இந்த நிலையில் தொற்றாத நோய்கள் கொள்கை அடிப் படையில், சீனி மற்றும் உப்புப் பாவனை தொடர்பில் புதிய



சட்டத்திட்டதை அமுலாக்கவும், இது தொடர்பில் மக்களுக்கு தெளிவு படுத்தவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

## காற்றலை மூலம் மின்சாரம் வலி.மேற்கில் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு கடற்கரையோரமாக காற்றலை மின்சார உற்பத்தி நிதியம் ஒன்றை அமைப்பதற்கு மாதிரித் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

பொன்னாலை முதல் மாதகல் வரையான கடற்கரையோரமாக பாரிய காற்றாடிகள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு திட்ட வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி கடற்கரையோரமாக உள்ள தனியார் மற்றும் அரச காணிகளில் காற்றாடிக் கோபுரங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்காக குறிப்பிட்ட காணிகள் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

அத்துடன் மேற்படி பகுதியில் அனைத்துக காற்றாடிக் கோபுரங்களையும் இணைகும் மத்திய மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட விருக்கின்றது.

ச்ன நாட்டு நிறுவனம் ஒன்று உள்நாட்டு கட்டுமானக் கம்பனிகள் சிலவற்றுடன் இணைந்து இந்த உத்தேச திட்டத்தைக் தயாரித்துள்ளது.

மிக விரைவில் இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் இப்போது இடம் பெற்று வருகின்றன.

## சோளகக் காற்றின் சீற்றம்; வன்னியில் குடிமனைகள் நாசம்

தற்போது வீசுகின்ற சோளகக் காற்றின் தாக்கத்திற்கு வன்னியில் மீள்குடியேறிய மக்களின் தரப்பாள் மற்றும் தற்காலிக தகர வீடுகள் சேதத்திற்குள்ளாவதாகத் தெரிய வருகிறது. இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள மேற்படி சில வீடுகளில் உள்ள தரப்பாள்கள் மற்றும் தகரங்கள் காற்றில் தூக்கி வீசப்படுவதாகத் தெரியவருகின்றது. அத்துடன் பாரிய மரங்களிலிருந்து மரக்கிளைகள் முறிந்து விழுவதுடன், காபெட் இடப்படாத செம்மண் கிரவல் வீதிகளில் புழுதிகளைக் கிளப்பி வாரியிறைப்பதால் பாதசாரிகள் பல அசௌகரியங்களுக்கும் அவலத்துக்கும் ஆளாவதாகத் தெரியவருகின்றது. (138)


## படை வீரர்களுக்கு புதிய குடியிருப்புக்கள்



(கொழும்பு)

"நமக்காக நாம்" நிதியத்தின் ஏற்பாட்டில் யுத்த வீரர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின்கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் 43 யுத்த வீரர்களுக்கான வீடுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையளித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மைத் திரிபால சிறிசேன, பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியாராச்சி, வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரட்ன திவுல்கனே, முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோததாபய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

51) 

(1) (2) (3) (4)

**பின்வரும் வசனங்களைக் குறிக்கும் தனிச் சொல்லைத் தருக.**

52) கடலும் வானும் சேர்ந்தாற் போல் தெரியும் பகுதி.
1) செவ்வானம் 2) தொடுவானம் 3) மேல்வானம்

53) ஒருவர் தம்மைப் பற்றித் தாமே எழுதும் வரலாறு,
1) முன்னுரை 2) சுயசரிதை 3) நன்றியுரை

54) நூறாவது ஆண்டிலே எடுக்கப்படும் விழா,
1) பொன்விழா 2) வைரவிழா 3) நூற்றாண்டு விழா

55) மனைவியை இழந்தவன்,
1) விதவை 2) தபுதாரன் 3) செல்வந்தன்

**பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

ஜப்பான் அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் நாடு. சுனாமி என்பது ஜப்பானியச் சொல். அண்மையில் சுமாத்திரா தீவுக்கு அண்மையில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக இலங்கையின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் கடல் அலை மிக வேகமாக ஊர்களுக்குள் வந்ததன் காரணமாக பெருந்தொகையான மனிதர்கள் இறந்தனர். சொத்துக்கள் அழிந்தன.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் இதுபோன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. பலகையால் அமைக்கப்பட்ட வீடுகளும், வீடுகளில் குறைந்தளவு பொருட்களைப் பயன்படுத்தலும், சுனாமி உண்டாவது தொடர்பான முன்னெச்சரிக்கை வழங்குவதற்கான நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலும், பாதுகாப்பான இடங்கள் அமைத்தலும் இவற்றுள் சிலவாகும்.

56) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
1. குறைந்த .................................... 2. அண்மையில் ....................................
3. நவீனம் .................................... 4. வேகமாக ....................................
5. இயற்கை .................................... 5. சில ....................................


57) கடல் அலைகள் வேகமாக ஊருக்குள் வருவதை எவ்வாறு அழைப்பர்?
(..................................................................................)

58) 'சுனாமி' எனும் சொல் எந்த மொழியிலிருந்து வந்ததாகும்?
(..................................................................................)

59) இவ்விபத்து எவ்வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும்?
(..................................................................................)

60) ஜப்பான் சுனாமியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப்பயன்படுத்தும் இரண்டு வழிமுறைகள் தருக.
(..................................................................................)

**வீட்டிலிருந்து புறப்பட்ட நிசானா மீண்டும் வீட்டுக்குத் திரும்பிய வரைபடம் தரப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.**




61) மேற்குத் திசையில் எத்தனை முறை திரும்பினாள்?
..................................................

62) அவள் அதிகமாகத் திரும்பியது வலது பக்கமா? இடது பக்கமா?
..................................................

63) இறுதியாக வீட்டுக்குச் செல்லும்போது எப்பக்கமாகத் திரும்பினாள்?
..................................................




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II
1 மணி 15 நிமிட

கல்வி முரசு
வெளியீடு 74
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



**சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**



1 2 3 4

மேலுள்ள உருக்கள் குறிப்பது வீதிவிதிகள் சிலவாகும். அதற்கமைய கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

01) பாடசாலைக்கு அருகில் பெருவீதியில் காணக்கூடியது, இதில் எத்தனையாவது உரு ஆகும்?
(..................................................................................)

02) நீர் பாடசாலைக்குச் செல்வது சைக்கிளில் எனில், வீதியின் எப்பக்கமாகச் செல்வீர்?
(..................................................................................)

03) முதல் உருவில் குறியீட்டினால் குறிக்கப்பட்டுள்ள பிரசித்தமான சர்வதேச அமைப்பு யாது?
(..................................................................................)

04) இரண்டாவது உரு எதனைக் காட்டுகின்றது?
(..................................................................................)

05) அதனை ஆங்கிலத்தில் எழுதுக.
(..................................................................................)

06) வாகனத்தைச் செலுத்தும் ஒரு சாரதியிடம் முக்கியமாக இருக்க வேண்டிய பத்திரம் யாது?
(..................................................................................)

07) நான்காவது உரு எதனைக் காட்டுகின்றது?
(..................................................................................)

**பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

நாகொடை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 5ஆம்
ஆண்டு மாணவர்கள் வழங்கும்
**"கலைநிகழ்ச்சி"**
காலம் - 2012 தை 24ஆம் திகதி பி.ப.2 மணி
இடம் - கல்லூரி பிரதான மண்டபம்
ரிக்கட் - 50/-, 25/-, 10/-
(பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் 10/-)
மண்டப வாயிலிலும், ஸ்ரார் புத்தகசாலையிலும்
ரிக்கற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்

08) இக்கலை நிகழ்ச்சியை எங்கு கண்டு களிக்கலாம்?
(..................................................................................)

09) அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.
1) .................................................. 2) ..................................................

10) கலைநிகழ்ச்சி எப்போது நடைபெறவுள்ளது?
(..................................................................................)

11) கலை நிகழ்ச்சிக்காக திருமதி பாலகுமார் நான்கு ஐம்பது ரூபா ரிக்கற்றுக்களையும், மூன்று பத்து ரூபா ரிக்கற்றுக்களையும் வாங்கினார். அவர் செலுத்திய பணம் எவ்வளவு?
(......................................................................................................)

12) நாகொடை இந்துக் கல்லூரி கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது. அக்கல்லூரி எந்த மாகாணத்தைச் சேர்ந்தது?
(......................................................................................................)

13) இக்கலை நிகழ்ச்சியை பா.அ.ச.ஒழுங்கு செய்தது. பா.அ.ச. என்ற சுருக்கக் குறிப்புகளை விரித்து எழுதுக.
(......................................................................................................)

14) இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து 150 மாணவிகள் கலை நிகழ்ச்சியைப் பார்க்க வந்தனர். அவர்கள் செலுத்திய பணம் எவ்வளவு?
(......................................................................................................)

15) கல்லூரி என்பதை ஆங்கிலத்தில் எழுதுக.
(......................................................................................................)

16) இக்கல்லூரி எந்த சமயப் பிரிவில் அடங்கும் என நீர் கருதுகிறீர்?
(......................................................................................................)

17) "வாயிலிலும்" என்ற சொல்லின் பன்மைச் சொல்லினை எழுதுக.
(......................................................................................................)

18) கலை நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படுகின்ற இசைக் கருவி ஒன்றின் பெயர் தருக.
(......................................................................................................)

19) அது எவ்வகைக் கருவியைச் சேர்ந்தது?
(......................................................................................................)

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

20) மாகாணக் கல்வி நிர்வாகத்திற்குப் பொறுப்பான அதிகாரி எவ்வாறு அழைக்கப்படுவார்?
1. கோட்டக்கல்விப் பணிப்பாளர் 2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
3. வலயக் கல்விப் பணிப்பாளர்


**பின்வரும் வாக்கியத்தில் நான்கு சொற்கள் எழுத்துப் பிழையாக உள்ளன. அச்சொற்கள் எவையெனக் கண்டு அவற்றைச் சரியாக எழுதுக.**

21) எமது கல்லூரி அதிபர் தலைமையில் புதிய முதலாம் தரமானவர்கள் இறண்டாம் தரமாணவர்களால் வரவேற்கப்பட்ட சம்பவம் 8.1.99 ஆம் திகதி நரைபெற்றது.

22) நெல், வேம்பு, பனை, தென்னை, பலா, இலுப்பை, வாழை, பப்பாசி, கமுகு, அரசு என்னும் தாவரங்களை ஆணிவேர் உள்ள தாவரங்கள், நாருருவேர் உள்ள தாவரங்கள் என வகைப்படுத்தி பின்வரும் அட்டவணையில் எழுதுக.

| ஆணிவேர் | நாருரு வேர் |
|---|---|
| | |

**கீழ்வரும் உருவை அவதானிக்கவும்.**



23) படத்தில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின் பெயர் யாது?
......................................................

24) இத்திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உண்டு?
......................................................

25) இத்திண்மத்திற்கு எத்தனை உச்சிகள் உண்டு?
......................................................

26) இத்திண்மத்தின் ஒரு முகத்தின் நீளம் 7 cm , 3cm அகலம் எனின், அதனை உருவில் குறித்துக் காட்டுக.
(......................................................................................................)

27) இத்திண்மத்தின் நிறை 1 kg 440 g எனின், அதை 6 சம பகுதிகளாக வெட்டினால் ஒரு பகுதியின் நிறை யாது?
(......................................................................................................)



28) இத்திண்மத்தின் ஒவ்வொரு முகத்திலும் பின்வரும் நிறங்கள் பூசப்பட்டன. அந்நிறங்களை ஆங்கிலத்தில் எழுதுக.
1. சிவப்பு .......................................... 2. பச்சை ..........................................
3. நீலம் .......................................... 4. மஞ்சள் ..........................................

29) கிராமசேவகர் ஒருவர் ஆற்றும் இரண்டு சேவைகளைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
- விவசாயக் கடன் வழங்குதல்
- அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுத்தல்
- வயோதிபர் இல்லத்திற்குப் பொறுப்பாக இருத்தல்
- உணவுப் பங்கீட்டு அட்டை வழங்குதல்
- நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்குதல்

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**
**(மகா இலுப்பலம, இந்தியா, மகாவலி கங்கை, வைரவிழா, வெண்புறா)**

30) சமாதானச் சின்னமாகக் கருதப்படுகின்ற பறவை எது?..........................................
31) இலங்கைக்கு மிக அண்மையில் உள்ள நாடு எது?..........................................
32) இலங்கையின் மிக நீளமான நதி எது?..........................................
33) 60 ஆவது ஆண்டு நிறைவு விழா?..........................................
34) நெல் ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்?..........................................
35) இரக்கம், இறக்கம் ஆகிய சொற்களை வைத்து பொருள் விளங்க வசனம் அமைத்து எழுதுக.

**பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

36) புல்லாங்குழல் ஓர் இசைக்கருவி அல்ல. ( )
37) தினகரன் என்பது ஒரு பத்திரிகை ஆகும். ( )
38) காற்று வீசும் திசையைக் காட்டுவது காற்றுவேகமானி. ( )
39) கனவுரு ஒன்றின் எல்லா முகங்களும் சதுரவடிவமானவை ( )

**40 முதல் 48 வரையுள்ள வினாக்கள் தொடர்பாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தாவரங்கள் எந்த வகையைச் சார்ந்தன என்பதை உரிய கூட்டிலே அடையாளத்தை இட்டுக் குறிப்பிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40) வெண்டி | ............ | ............ | ............ | ............ | ............ |
| 41) மா | ............ | ............ | ............ | ............ | ............ |
| 42) அறுகு | ............ | ............ | ............ | ............ | ............ |
| 43) குப்பைமேனி | ............ | ............ | ............ | ............ | ............ |
| 44) தென்னை | ............ | ............ | ............ | ............ | ............ |
| 45) பாகல் | ............ | ............ | ............ | ............ | ............ |
| 46) கோரை | ............ | ............ | ............ | ............ | ............ |
| 47) தேயிலை | ............ | ............ | ............ | ............ | ............ |
| 48) புடோல் | ............ | ............ | ............ | ............ | ............ |

**தரப்பட்ட நான்கு படங்களுள் வித்தியாசமான படத்தின் கீழ்க் கோடிடுக.**

49)

(1)

(2)

(3)

(4)

50)

(1)


(2)

(3)

(4)

# பெற்றோர்களின் அக்கறையிலேயே பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது

## யாழ். மாவட்ட உள சமூக இணைப்பாளர் கௌதமன்



(சிகரம்)

தற்காலத்தில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் பெரிய இடைவெளிகாணப்படுகிறது. அதாவது பிள்ளைகள் தமது பிரச்சினைகளை பெற்றோருக்கு சொல்வதில்லை இதனாலேயே பிள்ளைகள் இளம் வயதிலேயே வழிதவறிச்செல்கின்றனர் என யாழ். மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உள சமூக இணைப்பாளர் கௌதமன் தெரிவித்துள்ளார்.

ஷாலினி சாள்ஸின் மறுபக்கம் குறுந்திரைப்பட விழா யாழ் கலைத்தூது கலையகத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பெற்றோர்களின் அக்கறையிலேயே பிள்ளைகளின் எதிர்காலம் தங்கியுள்ளது.அந்தவகையில் பிள்ளைகளின் கல்வியில் மாத்திரமன்றி ஏனைய செயற்பாடுகளிலும் பெற்றோர்கள் சிறிதளவேனும் நேரத்தை ஒதுக்கி பிள்ளைகளுடன் பேசி அவர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும் எனத்தெரிவித்தார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வேலை செய்வதால் சிறுவர்களின் வாழ்க்கை சீரழிந்து போகிறது. இதனிலிருந்து மீண்டும் வெளிவந்து முன்னேற முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதாக இந்த மறுபக்கம் குறுந்திரைப்படம் வெளியிடப் பட்டுள்ளது.

தாய் தந்தை சகோதரர்கள் யாரும் அற்று தன்னுடைய சாப்பாட்டிற்காக ஒரு பணக்கார வீட்டில் வேலைசெய்து கொண்டு இருக்கும் போது அந்த வழியால் வந்த சிறுமி கல்விகற்ற பாடசாலையின் அதிபர் சிறுமியின் கதையைக்கேட்டு சிறுமியை படிக்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சிறுமி வேலை செய்யும் வீட்டு உரிமையாளருடன் கதைத்து தன்னுடன் கூட்டிச் சென்று பாடசாலையில் கல்வி கற்று வளர்ந்து பெரிய நிறுவனத்தின் இயக்குநராக வருவது போன்று குறுந்திரைப்படத்தின் கதை



அமைக்கப்பட்டுள்ளது.

குறுந்திரைப்படத்தை AAA மூவிஸ் யூ ஆர் பிறண்டன் பௌண்டேசன் நிறுவனத்தலைவர் செவ்வேள் வெளியிட்டு வைக்க ஷாலினி பெற்றோர் பெற்றுகொண்டனர்.

இந்த நிகழ்வில் அகிலஇலங்கை கலை இலக்கிய சங்கத்தலைவர் பண்டிதர் பொன் சுகந்தன் யாழ். மாவட்ட இளையோர் பணியக அருள்பணி ம.வி.கி இரவிச்சந்திரன் எழுத்தாளர் யோசேப்பாலா மற்றும் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.


# உமாகரனின் "கண்ணீர்ப்பூக்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா

(கிரு-சிகரம்)-



யாழ். இந்துக் கல்லூரி மாணவன் உமாகரனின் கண்ணீர்ப் பூக்கள், கன்னி எனும் இரண்டு கவிதை நூல் வெளியீட்டு விழா இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது

மங்கள விழக்கேற்றலை தொடர்ந்து யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தனது தலைமையுரையில், உமாகரன் தமிழ்த்தினப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றதுடன் 15 தங்கப்பதக்கம்களும், 3 முறை தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றதுடன் மொத்தமாக 25 முதலாம் இடங்களையும் பெற்றுள்ளார்.



யாழ். இந்துக்கல்லூரி தேசியமட்த்தில் முதலாம் இடத்தில் தற்போது காணப்படுவதற்கு உமாகரனின் அயராத உழைப்பும் விவாத திறமையுமே காரணம் என தெரிவித்தார்

இரண்டு நூல்களையும் AAA மூவிஸ் மற்றும் யு ஆர் பௌண்டேசன் நிறுவனத் தலைவரும் தென்னிந்தியத் திரைப்பட தயாரிப்பாளருமான செவ்வேள் வெளியீட்டு வைக்க உமாகரனின் பெற்றோர் பெற்றுக் பொற்றுக்கொண்டனர்

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக உதவி விரிவுரையாளர் செல்வ மனோகரன் ஸகந்தவரோதய கல்லூரி ஆசிரியர் மகாலிங்கம் இராமநாதன் கல்லூரியின் ஒய்வு பெற்ற ஆசிரியர் கலாபூசனம் திருமதி வை.கணேசப்பிள்ளை யாழ்பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ பேராசிரியர் தேவராஜா இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

# வெப்பத்திலிருந்து சருமத்தை பாதுகாக்க சில வழிகள்

(சிகரம்)

கோடை வெயில் சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. இந்த வெயில் எம் உடம்புக்கு முக்கிய எதிரி. வெயில் காலத்தில் உடம்பு வறண்டு, கருமையாகி, பொழிவிழந்து காணப்படும். அதை மாற்ற வெயில் காலத்தில் சருமத்தை புத்துணர்ச்சி அளிக்கச் செய்ய சில வளிகள்

யாழ்ப்பாணத்தில் அதிக நாட்கள் சுட்டெரிக்கும் சூரியனைத் தான் தற்போது பார்க்க முடியும். ஆனால் மற்ற காலங்களை விட உடம்பிற்கு பாதிப்பு ஏற்படுவது கோடை வெயில் தான். உடம்பில் உள்ள நீர்சத்து குறைவதால் உடம்பு பொலிவிழக்கும், கருமையாகும். உடம்பு மட்டும் இல்லாமல் தலைமுடி, கை, கால்களும் வறண்டு பாதங்களில் வெடிப்பு ஏற்படும். அதை சமாளிக்க வெயில் காலத்துக்கு ஏற்ற முறையில் சில அழகுக்குறிப்புகள்

பழ பேசியல்:-தர்பூசணி மற்றும் பழங்களின் கலவை கொண்ட கிறீம்களால் பேசியல் செய்யப்படும். முதலில் முகத்தை சுத்தம் செய்து, வறண்ட சருமத்தை நீக்கி, மசாஜ் செய்வதால் முகம் புத்துணர்ச்சியோடு காட்சியளிக்கும். இதிலுள்ள விட்டமின் சி மற்றும் ஆன்ட்டி ஆக்சிடெண்ட்கள் வெப்பத்தால் ஏற்படும் கருமையை போக்கி பளபளப்பாக்கி, ஈரப்பதம் அளித்து ஆரோக்கியமாக்கும்.

கூல் மசாஜ்:மருதாணி மற்றும் செம்பருத்தி கொண்டு செய்யப்படும் ஆயில் மசாஜ், தலைமுடியின் நிறத்தை கூட்டி நன்கு ஊட்டமளிக்கும். இதில் உள்ள இயற்கை கண்டிசன் முடிகளை பளபளப்பாக்கும்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கடை ஒன்றுக்கு கணக்காளர் ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இல.306, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது 021 321 8327, 0777716552 என்ற தொலைபேசி இலக்கத்தினுடாவோ தொடர்பு கொள்ளலாம்.

கொழும்பில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு Clerk தேவை. மாதாந்தம் 12 ஆயிரம் வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் 0756574136 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சென்ஜோன்ஸ் கல்லூரியில் உயிரியல் (ஆங்கில மொழி மூலம்) விவசாயம், கணக்கியல், பொருளியல், வியாபார கற்கைகள் (ஆஙகிலமொழி மூலம்) ஆகிய பாடங்கள் போதிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. ஆர்வமுள்ள பட்டதாரிகள் உறவினர் அல்லாத இருவருடைய சிபார்சுடன் சுய விபரக்கோவையை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பதாக The principal, St.John's College, Jaffna அல்லது St. John@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு எழுதுநர் பதவி வெற்றிடமாக உள்ளது. ஆர்வமுள்ளவர்கள் சங்கத்தில் விணணப்பத்தினைப் பெற்று எதிர்வரும் யூன் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

சவுதி அரேபிய விமான நிலையத்தில் வேலை வாய்ப்பு, பொது வேலைகள், தொலைபேசி இயக்குபவர்கள், சாரதிகள் தேவை. மேலதிக விபரங்களுக்கு 0779283535 இற்கு தொடர்பு கொள்ளவும்

Halo Trust கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தில் சாரதிக்கான பதவி வெற்றிடம் உண்டு. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை ஹலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நெல்லியடி பிரதான வீதியில் உள்ள புடவைக்கடைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் 0775696817 இற்கு தொடர்பு கொள்ளவும்.

முல்லைத்தீவில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், உணவு பரிமாறுபவர், றொட்டி தயாரிப்பவர் தேவை. தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0775360958 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் சகல பிரதேசங்களில் இருந்தும் கணினி விற்பனைக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ள இருபாலாரும் 0773232261 , 0776652424 இற்கு தொடர்பு கொள்ளவும்.

பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் மற்றும் ஏனைய விபரங்களை www.katpahachcholai.com என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

பிளாஸ்ரிக் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. பழக விரும்புபவர்களும் 021 2228680, 0775925088 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அமெரிக்க நிறுவனத்தின் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள 30 கிளைகளுக்குப் புதியவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் 0773001962, 0772310564 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கிளிநொச்சி - ஜெயந்திநகர் - நகரில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு கூலித்தொழிலாளி தேவை. உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் நாளை மாலைக்குள் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை தி.இராசநாயகம் (தலைவர்) மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு சேர்ப்பிக்கவும்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் உணவகத்திற்கு டிமேக்கர், உணவு விநியோகிப்பவர், உதவியாளர், சமையலாளர் தேவை. ஆர்வமுள்ள இருபாலாரும் தொடர்பு கொள்ளவும். தனுஷ் க்பே, 66 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் அல்லது 0775861437, 0774524780 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வெள்ளவத்தையில் உள்ள தொடர்மாடி வீட்டிற்கு இரண்டு பராமரிப்பாளர்கள் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் 0776316928 இற்கு தொடர்பு கொள்ளவும்.

இரும்புத் தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் 21 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை. உணவு, தங்குமிட வசதி உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0758038584 இற்கு தொடர்பு கொள்ளவும்.

சேட், டவுசர் தைக்கக்கூடிய ஆண்கள் தேவை. New Star Textiles & Tailors No.126, St.Anthony's mw. Colombo -13 மேலதிக விபரங்களுக்கு 0779770727 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# பிரதமர் உட்பட மத்திய அமைச்சர்கள்

# 15 பேர் மீது ஊழல் புகார்

பிரதமர் மன்மோகன்சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட, மத்திய அமைச்சர்கள் 15 பேருக்கு எதிராக, அன்னா ஹசாரே குழுவினர் ஊழல் குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால், பிரசாந்த் பூஷன் உள்ளிட்டோர், நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள, 15 அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளோம். இதில், பிரதமர் மன்மோகன் சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரின் பெயர்களும் உள்ளன. கடந்த, 2006 முதல் 2009 வரை, மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் பொறுப்பையும், பிரதமர் மன்மோகன் சிங் வகித்தார். அப்போது, நிலக்கரி சுரங்கங்கள், மிக குறைந்த விலைக்கு, தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய கணக்கு தணிக்கை அலுவலகம் (சி.ஏ.ஜி.) அளித்த அறிக்கையிலும் இந்த விவரம் இடம் பெற்றுள்ளது.


பிரணாப் முகர்ஜி ஸ்கார்பைன் நீர் முழ்கி கப்பல் வாங்கியதில், நான்கு சதவீத கமிஷன் பெற்றதாக, ஏற்கனவே ஒரு பிரச்சினை உள்ளது. அப்போது, இராணுவ அமைச்சராக இருந்தவர் தற்போதைய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி. இதனால், அவரின் பெயரும் இதில் இடம் பெற்றுள்ளது. '2ஜி' ஸ்பெக்ட்ரம் முறைகேடு நடந்தபோது, நிதி அமைச்சராக இருந்த தற்போதைய உள்துறை அமைச்சர் சிதம்பரத்தின் பெயரும், இதில் உள்ளது.

இதுதவிர, சரத் பவார், கபில் சிபல், கிருஷ்ணா, கமல் நாத், பிரபுல் படேல், விலாஸ்ராவ் தேஷமுக், சல்மான் குர்ஷித், பரூக் அப்துல்லா, அழகிரி, சுஷில் குமார் ஷிண்டே, வீர்பத்ர சிங் ஆகியோர் மீதும புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மது நடவடிக்கை எடுக்கக்கோரி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளோம். தனி அதிகாரம் கொண்ட, சிறப்பு விசாரணைக் குழுவின் மூலம் இந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், ஓய்வு பெற்ற மூன்று நீதிபதிகளை கொண்ட குழுவினர், இந்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தியுள்ளோம். எங்களின் இந்த கோரிக்கை மீது, வரும் ஜூலை 24ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், ஜூலை 25 முதல், காலவரையற்ற உண்ணா விரதத்தில் ஈடுபடுவோம. இவ்வாறு ஹசாரே குழுவினர் தெரிவித்தனர்.

இந்தியச் செய்திகள்

## பெற்றோல் விலை உயர்வினால்.....





# நாடாளுமன்ற கூட்டத் தொடரை புறக்கணித்த சோனியா, ராகுல்

நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு பாதி நாட்கள் வராமல் தாய் சோனியாவும், மகன் ராகுலும் புறக்கணித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மத்திய பட்ஜெட், ரயில்வே பட்ஜெட் என்று நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 36 நாட்கள் நடைபெற்றது. இதில் மத்தியில் ஆளும ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தலைவர் சோனியா காந்தியும் அவரது மகன் ராகுல் காந்தியும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, ராகுல் காந்தி அவையின் முக்கிய விவாதங்கள், நடவடிக்கைகளில் 22 நாட்கள் கலந்து கொள்ளவில்லை. அன்னை சோனியா காந்தி 16 நாட்கள் சபைக்கு வரவில்லை.

# எவரெஸ்டில் ஏறிச் சாதனை




ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பெண் உட்பட மூன்று பேர் உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்டை அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ராஜேந்திராபால், மேஹலல் மேகதா, பினிதா சோரன் மூவரும், இச்சாதனையை படைத்துள்ளனர். சுமார் 8,848 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தினை அடைந்து சாதனை படைத்தனர்.

இவர்களுக்கு டாடா முன்னணி ஸ்டீல் நிறுவனம் பாராட்டும், 7.50 மில்லியன் டொலர்கள் பரிசும் வழங்கி கௌரவித்துள்ளது. இதில் ராஜேந்திராபால் என்பவர், எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் என்ற பெருமை பெற்ற பச்சேந்திரா பவுலின் சகோதரர் ஆவார்.

# மக்கள் மீதான வரியை தமிழக அரசு குறைக்க வேண்டும்



பிடிவாதம் பிடிக்காமல் பெட்ரோல் விலை உயர்வை பெருமளவு மத்திய அரசு குறைக்க வேண்டும். திமுக அரசு செய்தது போல பெட்ரோல் விலை உயர்வு மதான விற்பனை வரியை தமிழக அரசு குறைக்க வேண்டும் என்று கருணாநிதி கூறியுள்ளார். இது தொடர்பாக திமுக தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய ஆட்சியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சிகள் எல்லாம் மத்திய அரசு செய்துள்ள பெட்ரோல் விலை உயர்வை ஏற்றுக் கொள்ளவில்லை. சில தோழமைக் கட்சிகள் போராட்டமே அறிவித்துள்ளன. திரிணாமுல் காங்கிரஸ் கட்சி மத்திய அரசில் இடம் பெற்றிருந்தும், மம்தா பானர்ஜி மேற்கு வங்க முதலமைச்சராக இருந்தும் அவரே தலைமையேற்று பேரணி நடத்துகிறார்.

ஆளும் கட்சி எடுக்கும் அத்தனை முடிவுகளையும் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் தோழமைக் கட்சி என்ற ஒன்று தேவையே இல்லை. அதே நேரத்தில் மத்திய அரசு எடுக்கின்ற ஒவ்வொரு முடிவும் எங்களை கேட்டுதான் செய்ய வேண்டும் என்ற அளவுக்கு தொந்தரவு செய்வதும் தோழமைக் கட்சிக்கு அழகல்ல. நிர்வாகத்தில் ஒரு தேக்க நிலையை அது உருவாககிவிடும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா. பாண்டியன் பெட்ரோல் விலை உயர்வை காரணமாக சொல்லி, மத்திய அரசுக்கு அளிக்கும் ஆதரவை திமுக வாபஸ் பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவரது கட்சி அதிமுகவுடன் சேர்ந்து தேர்தலை சந்தித்தது. ஆட்சியிலே அமர்ந்த அதிமுக பால் விலையை உயர்த்தியது, பேருந்து கட்டணத்தை உயர்த்தியது, மின் கட்டணத்தை உயர்த்தியது. அதற்காக அவரது கட்சி வெளியேறிவிடவில்லை என்றார்.

# மன்மோகன்சிங் மியான்மர் பயணம்

மூன்று நாள் பயணமாக பிரதமர் மன்மோகன்சிங் மியான்மர் புறப்பட்டு சென்றுள்ளார். புறப்படும் முன்னதாக நிருபர்களிடம் பேசிய பிரதமர் இந்த பயணம் இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவதுடன், மேலும் பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமாகிறது என்றார்.

சமீபத்திய 25 ஆண்டுகளில் இந்திய பிரதமர் மியான்மர் செல்வது குறிப்பிடத்தக்கது. இந்தப்பயணம் இரு நாடுகள் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவதுடன், முக்கிய பிரச்சினைகள் ஆலோசிக்கப்படும். வர்த்தகம், மற்றும் முதலீடு தொடர்பான விஷயங்களில் முக்கிய ஒப்பந்தம் கையொப்பமிடப்படுகிறது.

மியான்மர் நாட்டு ஜனாதிபதி தெய்ன்செயின் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆங்ஷாங் சூயி உள்ளிட்டோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

# அமெரிக்காவுக்கு கறுப்பின ஜனாதிபதி; இந்தியாவுக்கு நான் வரமுடியாதா? —பி.ஏ.சங்மா

கறுப்பினத்தைச் சேர்ந்த ஒபாமா அமெரிக்காவிற்கு ஜனாதிபதியாகும் பட்சத்தில் பழங்குடியினத்தைச் சேர்ந்த நான் இந்தியாவிற்கு ஜனாதிபதி ஆக முடியாதா என்று பி.ஏ.சங்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து டில்லியில் ஊடக சந்திப்பின் போது சங்மா கூறியதாவது; ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்தி, வெற்றி பெறச்செய்யக் கூடிய அளவுக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கோ, பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கோ போதிய பலம் இல்லை.

எனவே என்னை பொது வேட்பாளராக அறிவிக்க கருத்து ஒற்றுமையை உருவாக்க வேண்டும்.

அமெரிக்காவில் கறுப்பர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் அந்நாட்டிற்கு ஜனாதிபதி ஆவார் என்று யாரும் நினைத்துக்கூட பார்க்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் அந்த இனத்தைச் சேர்ந்த ஒபாமா ஜனாதிபதி ஆனார்.

ஆனால் இந்தியாவில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவராக முடியாதா? என்றார்.

சென்னை செல்லும் வரை நான் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் இல்லை. அங்கு சென்ற பிறகு, தேர்தலில் போட்டியிட தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கும் எனக்கு ஆதரவு தெரிவித்தனர்.

சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோரை நேரில் சந்தித்து ஆதரவு கோர திட்டமிட்டிருக்கிறேன் என்றார்.



# சிரியாவுக்கு விரையும் ரஷ்யாவின் ஆயுதக் கப்பல்



சிரியாவில் இராணுவத் தாக்குதல் மற்றும் வன்முறை சம்பவங்களில் ஒரே நாளில் மட்டும் 90 பேர் பலியாகி உள்ளனர், இதற்கிடையே ரஷ்யாவின் ஆயுத கபபல் சிரியாவுக்கு விரைவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக போராட்டம் நடைபெற்று வருகிறது. இராணுவத்தின் ஒடுக்குதல் நடவடிக்கை மற்றும் வன்முறைச் சம்பவங்களில் மட்டும் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளன.

ஆனால் தற்போது இந்த எண்ணிக்கை 11 ஆயிரத்தை தாண்டி விட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனால் ஐ.நா.சபை மற்றும் அரபு நாடுகளின் சிறப்பு பிரதிநிதியான கோபி அனான் 6 அம்ச சமரசத் திட்டத்தை உருவாக்கினார். அதன்படி போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகும் வன்முறை சம்பவங்கள் நீடிக்கிறது. இதில் தினமும் ஏராளமானோர் உயிர் இழக்கிறார்கள்.

எனவே மீண்டும் சமாதான முயற்சியில் ஈடுபட ஐ.நா. சிறப்பு தூதர் கோபி அனான் சிரியா செல்ல இருக்கிறார்.

இந்நிலையில் அங்கு 2 ஆவது பெரிய நகரமான ஹோம்ஸ் நகர வீதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டு ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் இராணுவ டாங்கிகள் குவிக்கப்பட்டு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. சில இடங்களில் கல்வீச்சு, துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்கள் நடந்தன.

இத்துடன் ஹுலா என்ற இடத்தில் இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலில் 13 குழந்தைகள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டதாக சிரிய மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

தற்போது ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு ரஷ்ய சரக்கு கப்பல் ஒன்று சிரியாவுக்கு செல்கிறது. அது இன்னும் ஓரிரு நாட்களில் சிரியா துறைமுகத்தை சென்றடையும் என தகவல்கள் வெளிவந்துள்ளன.

# 350 ஆண்டுகளுக்கு முந்திய நியூட்டனின் புதிருக்கு தீர்வு



கடந்த 350 ஆண்டுகளாக தீர்வு காண முடியாமல் இருந்த எண்கணிதத்திற்கு இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியை சேர்ந்த மாணவன் தீர்வு கண்டறிந்து சாதனை படைத்துள்ளான்.

இங்கிலாந்தின் டிரெஸ்டென் பகுதியில் வசிக்கும் சௌர்யா ரேய் என்ற அந்த மாணவன், விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டன் வகுத்த எண்கணிதத்திற்கு தீர்வு கண்டுபிடித்துள் ளதாக அந்நாட்டு பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் விஞ்ஞானிகள் சக்திவாய்ந்த கணிப்பொறி மூலம் தீர்வுக்கு முயற்சித்த அடிப்படை துகள் இயக்கவியல் கொள்கை தொடர்பானவற்றிற்கும் ரேய் தீர்வு கண்டுபிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பந்தை சுவரில் எறியும போது, பந்தின் திசை, சுவரில பந்து எவ்வாறு பட்டு திரும்பும் என்பதை உள்ளிட்டவற்றை விஞ்ஞானிகள் ஆராய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்பெயினில் முடங்கியது மிகப்பெரிய வங்கி




ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளில் ஒன்றான ஸ்பெயினின் நான்காவது மிகப்பெரிய வங்கியான பேங்கியா வங்கி இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் அரசிடமிருந்து சுமார் ரூபா 13 இலட்சத்து 30 ஆயிரம் கோடி (19 மில்லியன் யூரோ) நிதியுதவியைக் அந்த வங்கி கேட்டுள்ளது.

முன்னதாக வங்கிக் கடனில் மூழ்கி வருவதை அறிந்த ஸ்பெயின் அரசு இரு வாரங்களுக்கு முன்பு சுமார் ரூபா 3 இலட்சத்து 35 ஆயிரம் கோடி நிதியுதவி அளித்து, வங்கியை பகுதியாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கி என அறிவித்தது.

இந்நிலையில் அந்த வங்கி அரசி டம் மீண்டும் உதவிக்கரம் நட்டியுள்ளதால், அரசுக்கு மேலும் ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தனது கடன்களைத் திருப்பி அளிக்க நிதியுதவி வேண்டுமென்று கட்லோனியா மாகாண அரசும் கோரிக்கை விடுத்துள்ளது.

உலகச் செய்திகள்

# அல்கொய்தா சிறை வைத்துள்ள கைதியின் வேண்டுகோள்




ஏமன் நாட்டில் சவுதி அரேபிய தூதரக அலுவலகத்தில் துணை அதிகாரியாக பதவி வகித்த அப்துல்லா அல் காலிதி என்பவர் கடந்த மார்ச் மாதம் அல்கொய்தா தீவிரவாதிகளால் சிறை பிடிக்கப்பட்டார்.

அவரை விடுவிக்க வேண்டுமானால் சவுதி அரேபியா சிறையில் இருக்கும் அல்கொய்தா இயக்கத்தினரை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத் திருந்தனர். தற்போது அவர் பேசுவது போன்ற வீடியோவை அல்கொய்தா வெளியிட்டுள்ளது.

அதில், பிணைக்கைதியாக இருக்கும் என்னை விடுவித்து குடும்பத்தினருடன் மீண்டும் சேர மன்னர் அப்துல்லா நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக எத்தனை அல் கொய்தாவினர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற விவரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

# கனடாவில் 700 மாணவர்கள் கைது




கனடாவின் இரு பெரிய நகரங்களில் மட்டும் ஒரே இரவில் 700 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் முதல் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்களை ஒடுக்கும் வகையில் போராட்டங்கள் அனுமதிக்கப்பட்ட பாதைகளின் வழியே தான் நடத்த வேண்டும் என்ற புதிய சட்டத்தை பொலிஸார் கொண்டு வந்துள்ளனர். இச்சட்டமானது தங்களது ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதாக உள்ளது என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.


மேலும் இச்சட்டத்தின்படி தற்போது மொன்றியலில் 518 பேரும், கியூபெக்கில் 176 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கல்விக் கட்டணத்தை எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தைக் கண்டு கொள்ளப்போவதில்லை என கியூபெக் அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி மொன்றியலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் அமைதியாகவே நடந்தது. இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், தங்கள் மீது கற்களும், வேறு பொருட்களும் வீசப்பட்டதாகவும், அதன் பின்னரே போராட்டக்காரர்களை சுற்றி வளைத்ததாகவும் தெரிவித்தனர்.

# உலக நாடுகளைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முயற்சி செய்கிறது

## குற்றம் சாட்டுகிறது சீனா



தென்சீனக் கடல் பிராந்தியத்தில் நிலவி வரும் பிரச்சினைகளில் சட்டரீதியாக தலையிட அமெரிக்கா முயறசி மேற்கொள்கிறது என சீனா குற்றம் சாட்டியுள்ளது.

160 நாடுகளும், ஐரோப்பிய கூட்டமைப்பும் கையெழுத்திட்டுள்ள ஐ.நாவின் கடல் சார் உடன்படிக்கையில் கையெழுத்திட அமெரிக்க செனட் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தை அமெரிக்கா நீண்ட காலமாக புறக்கணித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இதில் கையெழுத்திட திடீரென அமெரிக்கா எடுத்துள்ள முடிவு தென்சீனக் கடல் பிரச்சினையில் தலையிட விரும்பும் அதன் சுயநல நோக்கத்தைக் காட்டுகிறது என்று சீன அரசு செய்தி நிறுவனமான ஜின்ஹவா விமர்சித்துள்ளது.

மேலும் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ தளங்களில் உலகம் முழுவதும் தனது நோக்கத்தை அடையவே இந்த முடிவை அமெரிக்கா எடுத்துள்ளதாகவும் ஜின்ஹவா தெரிவித்துள்ளது.

மேலும் வெளியுறவுக்கான செனட் குழுவின் தலைவர் ஜான் கெர்ரியையும் கடுமையாக விமர்சித்துள்ளது. சீனா உள்ளிட்ட சில நாடுகள் தென்சீனக் கடலிலும், மற்ற கடற பகுதிகளிலும் சட்டவிரோதமாக உரிமை கொண்டாடு கின்றன என்று கெர்ரி தெரிவித்திருந்தார்.

இவற்றுக்கு எதிராகவும், நமது வர்த்தக மற்றும் போர்க் கப்பல்கள் பயணம் செய்ய சட்ட விரோதமாக விதிக்கப்படும் தடைக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கு இந்த உடன்படிக்கை உதவும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

# 9/11 தாக்குதல் விமானியின் மனைவி திடீர் மரணம்



அமெரிக்காவின் நியூயோர்க்கில் 9/11 தாக்குதல் நடவடிக்கையின் போது, வெள்ளை மாளிகையை தாக்குவதற்காக செலுத்தப்பட்ட விமானம் பயணிகள் மற்றும் விமானிகளின் சாதுரியத்தால் திசை திருப்பப்பட்டது.

இவ்விமானம் பென்சில்வானியாவில் வீழ்ந்து நொருங்கி அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருந்தனர்.

இதில் பயணம் செய்த பயணிகள் மற்றும் விமானிகளின் உயிர்த்தியாகம் பெரிதாகப் பேசப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் இவ் விமானத்தை செலுத்தியிருந்த விமானியின் மனைவியான சாண்டி டாஹ்ல் (வயது - 52), இறந்த நிலையில் கொலராடோவிலுள்ள இவரது வீட்டில் மீட்கப்பட்டுள்ளார். இவரின் மரணத்துக்கான காரணம் வெளியிடப்படவில்லை.

# இத்தாலிக் குழந்தைக்கு குட்டி செயற்கை இதயம்




(உரோம்)

இத்தாலியில் 1 1/2 வயது குழந்தையின் உயிரைக் காப்பதற்காக குட்டி செயற்கை இதயத்தை பொருத்தி மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

இத்தாலி பேம்பினோ ஜெசு குழந்தைகள் மருத்துவமனையில் கடந்தாண்டு மார்ச் மாதம், மருத்துவர் அன்டோனியோ அமோடியோ தலைமையில் 16 மாத குழந்தைக்கு செயற்கை இதயம் பொருத்தும் அறுவை சிகிச்சை நடந்தது.

எட்டு மணி நேரம் நடந்த சிக்கலான அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது. இதுகுறித்து அன்டோனியோ கூறியதாவது,

16 மாத குழந்தைக்கு செயற்கை இதயமும் தொடர்ந்து மாற்று இதயமும் பொருத்தி உள்ளோம். மிகவும் சவாலான இந்த அறுவை சிகிச்சைக்கு பின் குழந்தை ஆரோக்கியமாக உள்ளது என்றார்.

# சிட்டியும் சுட்டியும்

**ஆந்தையாருக்கு** ஒரே ஆச்சரியம். "விளையாட்டு மைதானத்தில் தனியாயிருந்து அழுது கொண்டிருக்கும் அந்தச் சின்னப் பெண்யாராக இருக்கும்? ஏன் பள்ளிக்கூடம் போகாமல் இங்கே இருக்கிறாள்" என்றெல்லாம் அவர் எண்ணம் ஓடியது..

அவள் அருகில் சென்று அமர்ந்த ஆந்தையார் அவள் கண்ணீரைக் கண்டு வருந்தினார்.

''ஏன்ரா அழுறாய் குட்டிப் பெண்ணே?"

"எனக்கு பள்ளிக்கூடம் போகவே பிடிக்கேல்ல" எனக் கேவினாள் அவள்.

"அதுதான் ஏன்?"

"யாருமே என்னைத் தங்கள் விளையாட்டுகளில் சேர்த்துக் கொள்றேல்ல"

"ஏன்?''

"ஏனெண்டா எனக்கு நண்பர்களே இல்லை."

"சரி ஏன் அப்பிடி?"

"நான் இங்கே புதுசா வந்திருக்கும் மாணவி''

"அதுக்காகவா அழுது கொண்டிருக கிறாய்?''

"ஆமாம், என்ன செய்து அவங்களை என் நண்பர்கள் ஆக்குறதென்று தெரியேல்ல."

"சரி, உன் பேர் என்னம்மா?"

"என் பேர் மீரா"

"நல்லது! கவலை வேண்டாம் மீரா. இப்ப நான் உனக்கு ஒரு கதை சொல்றேன். அதைக் கேட்டதும் உன் பிரச்சினை தீர என்ன பண்ணோணும் ஏன்று நீயே தெரிஞ்சு கொள்வாய்."

அந்தச் சின்னப் பெண் கண்களைத் துடைத்துக் கொண்டு ஆவலுடன் கதை கேட்கத் தயாரானாள். ஆந்தையார் கதை சொல்ல ஆரம்பித்தார்....

இந்தக் கதை ஏதோ ஒரு மோசமான தினத்திலோ அல்லது அழகில்லாத இடத்திலோ ஆரம்பிக்கவில்லை. அன்றைய தினம் அபாரமாக விடிந்திருந்தது. கதை தொடங்கும் இடமும் அருமையானது..

இந்தக் கதை சிட்டி, சுட்டி எனப் பெயர்களையுடைய இரு சகோதரர்கள் பற்றியது. அவர்கள் முயல்கள் என்பதும் கதைக்கு முக்கியமே.

இக்கதை ஆரம்பிக்கும்போது அவர்கள் தூங்கிக் கொண்டோ, ஓய்வெடுத்துக் கொண்டோ, விளையாடிக் கொண்டோ இல்லை. அவர்கள் பள்ளிக்கூடம் போவதற்கான ஆயத்தங்களில் இருந்தார்கள்.

முயல்கள் பள்ளிக்கூடத்தில் அன்று என்ன சொல்லிக் கொடுத்தார்கள் தெரியுமா? கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தலா? இல்லவே இல்லை. முயல்களுக்கான பொந்துகளை எவ்வாறு செய்வது என்பதைத்தான் அன்று கற்று கொண்டார்கள். அந்தப் பொந்துகள் முயல்கள் வசிக்க வசதியாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கிய விஷயம்.


எல்லா முயல்களுக்குமே நல்ல மதிப்பெண்கள் எப்போதுமே கிடைக்கும் எனச் சொல்ல முடியாது. ஆனால் தேவையான உற்சாகங்களும் ஊக்குவிப்புகளும் தாராளமாகவே கிடைக்கும். ஆனால் அன்றைக்கு சுட்டி மட்டும் விதிவிலக்கு. அவன் உண்டாக்கிய பொந்து அபாரம். அவனுக்கு மட்டும் நல்ல மதிப்பெண் கிடைத்தது.

அன்றைக்கு அந்த முயல்கள் குடியிருப்பில் வசிக்கும் ஏனைய முயல்களுக்கு சீதோண நிலை பற்றியோ தங்கள் அண்டைவீட்டார் பற்றியோ வம்பு பேச நேரமே இல்லை. எல்லோருமே சுட்டி உருவாக்கிய அழகான பொந்தைப் புகழ்ந்தனர். அவன் தோண்டும் அழகையும், பொந்தை அருமையாக வடிவாக்கிய திறமையையும் கண்டு வியந்தனர்.

அவனுக்கு இப்போ இராக்காவல் வேலையோ, குட்டி முயல்களை பாதுகாக்கும் வேலையோ தரவில்லை. அவன் வேலை அந்தக் குடியிருப்பில் எப்போதெல்லாம் பொந்துகள் தேவைப்படுகின்றனவோ அப்போதெல்லாம் அவற்றை உருவாக்க வேண்டியது என்றாயிற்று.

அவன் மேல் வைத்த நம்பிக்கை பொய்யாகவில்லை. மற்றவர்கள் எதிர்பார்த்தது போலவே அழகான மற்றும் உபயோகரமான பொந்துகளை அவன் உருவாக்கலானான்.

அவன் தம்பி சிட்டியும் அண்ணனுக்கு துணையாக அண்ணன் தோண்டத் தோண்டக் குவியும் மணல்களை அப்புறப்படுத்துவது போன்ற சுற்று வேலைகளை செய்து வந்தான்.



வேலை அதிகம் இல்லாத சமயங்களில் சிட்டி தூங்கியோ சோம்பி உட்காரவோ இல்லை. பொந்தின் சுவர்களை அழகுபடுத்துவதில் ஈடுபட்டான். அவற்றில் இலைகள், குச்சிகள், சிறு கற்கள் ஆகியவற்றைப் பொருத்தி அவற்றைச் சுற்றி ஒரு சட்டமும் பொருத்தினான். இதை கலை என அழைத்தான்.

முதலில் இதையெல்லாம் குடியிருப்புக்காரர்கள் யாருமே கவனிக்கவில்லை. ஆனால் மெதுவாக அவர்கள் கவனம் சிட்டியின் வேலையால் ஈர்க்கப்பட்டது. யாரும் சிட்டியை அவன் முயற்சிக்காக கேலி செய்யவில்லை என்பதையும் சொல்லியாக வேணும்..

இது சுட்டிக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ''சிட்டி கஷ்டமான வேலையெல்லாம் செய்யிறதேயில்லை. வெறுமனே சுவரைப் பார்த்துக்கொண்டு மணிக்கணக்காக காலத்தைக் கழிக்கிறான் அவ்வளவுதான்" என்பது அவன் புகார். தம்பி மேல் மெதுவாக ஒரு பொறாமை உருவாயிற்று.

நாட்கள் கழிந்தன. சுட்டியின் பொறாமையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது,.

சிட்டி செய்யும் வேலைகளை அவன் புகழவில்லை. அதற்கு மாறாக அவன் தனது தம்பியை அவனது சோம்பேறித்தனத்துக்காக கண்டபடி திட்ட ஆரம்பித்தான்.

சுட்டி தன் தம்பி பற்றிய புகார்களை எல்லோரிடமும் சொல்ல ஆரம்பித்தான். அவன் தம்பி ஒரு உதவாக்கரை, ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவன் என்றெல்லாம் அவனைப் பற்றி ஏச ஆரம்பித்தான்.

கடைசியில் சிட்டி எல்லா பொறுமையையும் ஒரு நாள் இழந்தான். சவாலாக தன் அண்ணனை தன்னுடன் பொந்து அமைக்கும் போட்டிக்கு அழைத்தான்.

"நாம் இரண்டு பேருமே ஆளுக்கொரு பொந்தை உருவாக்குவோம். அவற்றில் எது மிக அழகான, உபயோகமான பொந்து என்பதை மற்றவர்கள் தீர்மானிக்கட்டும்'' என்றான் அவன்.

சுட்டியும் தயங்காமல் சவாலை ஏற்றுக்கொண்டான்.

சகோதரர்களிடையே இந்தப் போட்டி பற்றிய செய்தி காட்டு நெருப்பு போல பரவியது. உள்ளூர் தொலைக்காட்சியில் அன்றைய மாலைச் செய்தியில் இது பற்றி பேசப்பட்டது. செய்தி தொகுப்பாளர் கிண்டலுடன் கூறினார்,

"இதையே ஒரு சமையல் போட்டி என கற்பனை செய்து கொண்டால் ஒரு சமையல் நிபுணருடன் ஒரு வெத்து வேட்டு சாப்பாட்டு ராமன் போட்டி போடுவது போல இருக்கும். சிட்டிக்கு சாப்பிடத்தான் தெரியும் அவன் போய் சுட்டியுடன் போட்டி போடுவதா?"

அடுத்த இரு நாட்களுக்கு சிட்டிக்கு தூக்கமே வரவில்லை. எவ்வாறு பொந்து அமைப்பது என்ற ஆலோசனையிலேயே அவன் நேரம் கழிந்தது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அது பற்றி ஒரு உபாயமும் அவனுக்குத் தோன்றவேயில்லைதான்.

ஆலோசனையில் மூழ்கியிருந்த சிட்டி தன்னைக் கொல்லும் நோக்கத்துடன் ஒரு நரியார் வருவதைக் கூட கவனிக்கவில்லை. நரியார் என்ன அவனுடன் விளையாடவா வந்தார். அவனை உண்ணத்தானே வந்தார்.

**- சுந்தர்**

சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதைக்கூட கவனியாது இருக்கும் சிட்டியைப் பார்த்து நரியாருக்கு ஒரே ஆச்சரியம். அவருக்கு பசிதான், இருந்தாலும் சிட்டி அவ்வாறு இருப்பதன் காரணத்தை அறியும் ஆவல் அதிகமாயிற்று. அம்மாதிரி தான் வரும்போதே துள்ளிக் குதித்து தப்பித்து, ஒளிந்து ஓடாத முயலை இப்போதுதான் அவர் பார்க்கிறார் என்பதும் அவரது ஆவலைத் தூண்டியது.

"இதைத்தான் நம் பெரியவர்கள் மகிழ்ச்சியுடன் சாப்பிடுவது என்று சொல்கிறார்களோ?'' எனச் சிந்திக்க ஆரம்பித்தார்.

இப்போ ஆவல் போய் குழப்பம் வந்தது.

"என்ன முயல் தம்பி! உன் பிரச்சினை என்ன?'' என இப்போது நரியார் கேட்டார்.

சிட்டி தனக்கும் தன் அண்ணனுக்கும் இடையில் எழுந்த போட்டி பற்றிய முழு விவரங்களையும் கூறினான். கூடவே ஒரு நல்ல பொந்துக்கு தேவையான விஷயங்கள் பற்றிய தனது அறியாமையையும் ஒத்துக் கொண்டான்.

''என் அண்ணன் சொல்லுறது போல நான் இந்த வேலைக்கே லாயக்கில்லாதவனே என்பதுதான் நிஜம்'' என சோகத்துடன் சிட்டி கூறினான். "நாளை போட்டியிலே இது எல்லோருக்கும் தெரியப் போகிறது" எனப் பெருமூச்சு விட்டான்.

"கவலை வேண்டாம்'' என்றார் நரியார். ''நான் உனக்கு உதவி பண்ணுகிறேன். ஒரு அருமையான யுக்தி சொல்லித் தருகிறேன். இதே யுக்தியை எனக்குத் தெரிஞ்ச கணக்கு வாத்தியார் தனது மாணவர்களுக்குச் சொல்லி நான் கேட்டிருக்கிறேன்."

சிட்டியின் துயரம் பறந்தது. அவன் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது.

''பிரச்சினையை தலைகீழாய் புரட்டிப் போடு, விடை கிடைக்கும் என்றார்'' நரியார்.

"அது எவ்வாறு?" என மயங்கினான் சிட்டி.

"ஒரு உபயோகமில்லாத பொந்தை எப்படி அமைப்பது என்பது பற்றி யோசிக்க முடியுமா உன்னால்?"

சற்றே யோசித்த சிட்டி படாலெனக் கூறலானான், ஒரு மோசமான பொந்தில்

1. மிகக் குறைவாக வாசல்கள் இருக்கும்,

2. அதிலே உள்ளே மிகவும் குறைவான வழிகள் மற்றும் பூமிக்கு அடியில் சுரங்கப் பாதைகள் இருக்கும்,

3. வாசல்களோ வழிகளோ ஒரு முயலுக்கு ஏற்ற அளவில் இருக்காது. இத்யாதி, இத்யாதி" ...

என சிட்டியின் பட்டியல் அவனால் நிறுத்த முடியாமல் நீண்டு கொண்டே போயிற்று.

மூச்சு வாங்க சிட்டி தன் பட்டியலை கூறி முடித்தான். நரியார் கூறினார்,

"இந்த மாதிரியான தவறான விஷயங்களை தவிர்த்தால் நீ உருவாக்கும் பொந்து அழகாக உபயோகமானதாக அமையும் அல்லவா."

ஆசுவாசத்துடன் சிட்டி புன்முறுவல் செய்தான். நரியார் சொன்னதன் அர்த்தம் புரிந்தது அவனுக்கு. நேரத்தை வீணாக்காமல் பொந்து அமைப்பதில் ஈடுபட்டான்.


சகோதரர்களின் முயற்சிகளை அவதானித்து எது சிறந்தது எனத் தீர்மானம் செய்ய வேண்டிய நேரம் வந்த போது குடியிருப்புக்காரர்களுக்கு ஒரு பிரச்சினை வந்தது. இரண்டு பொந்துகளுமே அருமையாக இருந்தன. ஒன்றுக்கொன்று சளைக்கவில்லை. ஆக, அவர்களில் ஒரு சகோதரன் தனது அனுபவத்தால் கற்றதை இன்னொரு சகோதரன் தான் எதைச் செய்யக்கூடாது என்பது பற்றி கற்பனை செய்து கற்றான் என்பது குடியிருப்புக்காரர்களுக்கு புரிந்தது.

ஆந்தையார் இவ்வாறு கதையை முடிக்க, குட்டிச் சிறுமி மீராவின் முகத்திலும் பிரகாசம் வந்தது,

"என்ன செய்யக் கூடாது என்பதை இப்போது அறிந்து கொண்டேன்'' என்றாள் மீரா, "என் வகுப்புத் தோழர்கள் மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும்".

"அதுதான், அப்போதுதான் நீங்கள் எல்லோருமே எப்போதுமே நண்பர்களாக இருப்பீர்கள்''. ●

# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் 2010 - 2011 ஆம் ஆண்டுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதன்போது யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 434 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதில் புலமைப்பரிசில்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென ரின் (உதயன்), யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குண ராசா உள்ளிட்டோர் வழங்கி வைத்தனர்.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த மாவட்ட அரச அதிபருக்கும் ஏனையோருக்கும், தாம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாகவும், இவ்வாறான சந்தர்ப்பங்களை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்தி தாம் சார்ந்த குடும்பம், சமூகம், நாட்டுக்கும் சேவைகளைச் செய்ய வேண்டுமெனவும், அதுவே அவர்கள் செய்கின்ற பெரும் கடமைப்பாடு என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாணவர்கள், மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## அமைச்சர்...

இந்நிகழ்வின் போது, மன்னார் மறைமாவட்ட ஆயரை தம்பிள்ளை புத்த பிக்குகளுடன் ஒப்பிட்டு நாடாளுமன்றத்தில் அமைச்சர் றிசாட் பதியுதீன் கடுமையாக பேசியதனைக் கண்டித்து பல்வேறு தரப்பினர்களுடைய கண்டன அறிக்கைகளும் வாசிக்கப்பட்டன.

அமைச்சர் றிசாட்டே உனது அரசியல் அராஜகம் ஒழிக எம் நிலங்களை அபகரிக்காதே, உன் முகத்திரை கிழிக்கப்படும் உன் முகத்திரை அழிக்கப்படும், உன் சதி வேலைக்கு நாம் சாய மாட்டோம், உண்மையை உலகிற்கு உணர்த்துவோம், சர்வமத ஒற்றுமையை சாகடிக்க நினைக்காதே, றிசாட்டே பேசக் கற்றுக்கொள், அமைதியின் ஆயருக்கு அவதூறு கொடுக்க நீ யார்? போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை மக்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

## உரிமைகள் கிடைக்காது...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போரின் போது அரசாங்கத்துக்கு இராணுவ மற்றும் இராஜதந்திர ரீதியில் ஆதரவினை வழங்கிய சர்வதேச சமூகம், அப்போது அரசாங்கம் தமக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு தற்போது அழுத்தங்களை கொடுக்கத் தொடங்கியுள்ளது.

போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆனநிலையிலும், அந்த வாக்குறுதிகளை அரசாங்கம் வழங்கத் தவறியதால், சர்வதேச சமூகம் இலங்கையின் மீது தற்போது அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. ஆகவே இந்தத் தருணத்தில் தமிழ் மக்கள் பொறுமை காக்க வேண்டும்.

அதேவேளை, மறுபுறமாகக் கூறினால், ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமக்கான உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் உலக சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும். சர்வதேச சமூகத்துடன் நாம் எமது உறவுகளை பலப்படுத்தி அதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான ஒரு தீர்வை பெற முடியும்.

அதேவேளை தமிழர் பிரச்சினைக்கான தீர்வு யோசனை என்பது சர்வதேச சமூகத்தால் ஏற்கப்படக் கூடியதாகவும், அனைத்து தரப்பாலும் நிராகரிக்கப்பட முடியாத நியாயப்பாடு உடைய ஒன்றாகவும், குறிப்பாக தமிழர் தாயகத்தில் வாழும் முஸ்லிம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு கட்டமைப்பாக அது அமைய வேண்டும் என்றும் சம்பந்தன் கூறியுள்ளார்.

## யாழ். பல்கலையின்...

யாழ் பல்கலைகழகத்தின் ஏனைய பீடங்களையும் கிளிநொச்சிக்கு மாற்றுவதன் மூலம் இந்தப் பிரதேசம் விரைவான அபிவிருத்தியை நோக்கிச் செல்லும். இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்ற மாணவர்கள் தங்களது கூடிய பங்களிப்பினைச் செலுத்த வேண்டும்.

வடக்கிலிருந்து பல்கலைகழகத்திற்கு செல்கின்ற மாணவர்கள் பல்கலைகழகத்திலிருந்து வெளியேறுகின்ற போது குறைந்தது ஒரு வருடமாவது வடக்கில் சேவையாற்ற வேண்டும். என்பது தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடியுள்ளோம் அதுவும் சாத்தியப்படும் என நம்புகிறோம்.

கடந்த காலத்தில் எமது மக்கள் பெரும் இழப்புக்களையும் துன்பங்களையும் சந்தித்து மீண்டு வந்திருக்கின்றார்கள். எனவே மீண்டும் அவ்வாறானதொரு சூழலை உருவாக்கும் செயற்பாடுகளைத் தவிர்த்து நல்லதொரு எதிர்காலத்தை நோக்கிச் செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மேலதிக அரச அதிபர் சிறினிவாசன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிறிசெல்வம், பிரதேச செயலர்கள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## பொன்சேகாவுடன்...

பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தீர்மானத்தை அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திலேயே கூட்டமைப்பு கூடுதல் கவனம் செலுத்தியதாகவும், சரத் பொன்சேகா விவகாரம் பற்றி கவனிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பரிந்துரைகள்...

விடயத்தில் இலங்கை அரசாங்கம் துரிதமாகப் பதிலளிக்கும் என்பதே எமது நம்பிக்கை.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் அண்மைய வொஷிங்டன் பயணத்தின் போது இவை குறித்து கலந்துரையாடப்பட்டது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா தொடர்ந்து கலந்துரையாடி வருகிறது.

வடக்கில் படைக்குறைப்பு செய்யப்படுவது குறித்தும் தமிழ் சமூகத்துக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் குறித்தும் அமெரிக்கா அக்கறை காண்பித்தது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஐ.நா. மனித...

அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் கருணாதிலக்க அமுனுகம எமது செய்திச் சேவைக்குத் தகவல் தருகையில், மனித உரிமைகள் ஆணையகம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய யோசனையில் உள்ள விடயங்களை அரசாங்கத்தின் இணக்கப்பாடின்றி நடைமுறைப்படுத்த முடியாது என குறிப்பிட்டார்.

அதேவேளை, மனித உரிமைகள் ஆணையாளரின் பிரதிநிதிகளை இலங்கைக்குள் ஏற்பதா இல்லையா என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# நெருஞ்சிமுனை கொலை வழக்கு சந்தேகநபர் சட்டத்தரணி ஊடாக ஆஜர்

(திருநெல்வேலி)

ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனை கொலை வழக்கில் தேடப்பட்டுவந்த இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர் தனது சட்டத்தரணி மூலம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை ஆஜர்படுத்தப் படுத்தப்பட்டார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மாசி மாதம் 30 ஆம் திகதி நெருஞ்சிமுனையில் ராசன் டெனிஸ் என்பவரை ஜேசுதாசன் ஜெமிலியாஸ், வேலாயுதம் பிரதீபன், ரவிஜன்சன், யோசை ஜேசுதாசன் ஆகியோர் கொலை செய்ததாக ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதவான் ஆர்.எம்.எஸ்.மகேந்திரராஜா இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும் இரு சந்தேகநபர்களான செல்லத்துரை ரஜி என்பவரும் டன்சன் என்பவரும் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தநிலையில் செல்லத்துரை ரஜி என்பவர் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரன் மூலம் நீதிமன்றில் ஆஜாபடுத்தப்பட்டார். இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கொலைசெய்யப்பட்டவரான ராசன் டெனிஸ் என்பவரின் மனைவி 2010 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி அளித்த வாக்குமூலத்தில் தனது கணவனைத் தேடி பொல்லுகள், தடிகளுடன் வந்தவர்களில் செல்லத்துரை ரஜியும் இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தேடப்பட்ட மற்றைய சந்தேகநபர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. வழக்கு விசாரணை அடுத்த மாதம் 07 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (137)

# 'பாதுகாப்பாக இருப்போம்' பற்றிய செயலமர்வு

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்பப் பிரிவில் கல்வி கற்பிக்கின்ற ஆரம்பப் பிரிவு ஆசிரியருக்கான 'பாதுகாப்பாக இருப்போம்' என்ற தலைப்பிலான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் மாங்குளம் ஆசிரிய மத்திய நிலையத்தில் காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்குறிப்பிட்ட தலைப்பில் நடைபெறவுள்ள செயலமர்வில் துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் ஆரம்பக் கல்விப் பிரிவில் தரம் 2,3,4 இல் கற்பிக்கும் ஆசிரியர்களில் 3 தரங்களும் அடங்கலாக பாடசாலைக்கு 3 ஆசிரியர்கள் வீதம் தவறாது இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட்சாலை அதிபர்களை துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றா கேட்டுக்கொண்டுள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்களே மேற்படி செயற்திட்டத்தினை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா 3 ஆசிரியர்களை தவறாது பங்குபற்றச் செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (42)

# சென்னை சுப்ப கிங்ஸை வீழ்த்தி கிண்ணம் வென்றது கொல்கத்தா



(சேப்பாக்கம்)

சென்னை சுப்ப கிங்ஸ் அணியைத் தோற்கடித்து கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஐ.பி.எல் கிண்ணத்தை சுவீகரித்தது.

சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் நேற்று நடை பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை சுப்ப கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி அவ்வணியின் ஆரம்ப வீரர்களாக முரளி விஜய், மைக் ஹசி இருவரும் களமிறங்கி சிறந்த அடித்தளத்தை இட்டனர். இதில் விஜய் 42, ஹசி 54 பின்னர் வந்த ரெய்னா 73 ஓட்டங்களை பெற சென்னை அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன, கலிஸ், பாட்டியா மூவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது. அவ்வணித் தலைவர் கம்பீர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் பிஸ்லா, கலிஸ் ஜோடி இணைந்து சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது.

இதில் பிஸ்லா 89, கலிஸ் 69 ஓட்டங்களைப் பெற்றனர். நிறைவில் 19.4 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்த கொல்கத்தா அணி 192 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் சென்னையை வெற்றிகொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக பிஸ்லா தெரிவானார்.

## கோண்டாவில்...

கோண்டாவிலிலுள்ள நல்லாயன் தேவாலய வீதியில் இவர்களை வழிமறித்த குழுவொன்று தந்தையை தாக்கிவிட்டு குறித்த யுவதியை வானொன்றில் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடத்தல் சம்பவம் பேஸ்புக் மூலமாக ஏற்பட்ட தொடர்பினால் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகாலப் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

கல்முனைக்கு விஜயம் செய்திருந்த அசோக் கே.காந்தா அங்குள்ள இருதயநாதர் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் பிரதி மேயர் நிஸாம் காரியப்பரின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் செய்த அவர், அப்பிரதேச அரசியல் வாதிகள் மற்றும் கல்முனை நகர வர்த்தகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இதன்போது, இலங்கையின் இறையாண்மைக்கு எவ்விதத்திலும் பாதிப்புகள் ஏற்படாத வகையில், இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இந்தியா ஆர்வமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கையின் இறையாண்மையை இந்தியா மதிப்பதாகவும், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் தலைமையிலான சமயங்களின் சமாதானத்துக்கான ஒன்றியத்தின் பிரதிநிதிகளை இவர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் சந்தித்தார். இதன்போது மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இவரகள் அசோக் கே.காந்தாவுக்கு எடுத்து விளக்கியுள்ளனர்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் ஆகியன குறித்தும் இந்தியத் தூதுவரிடம கிங்ஸ்லி சுவாமபிள்ளை அடிகளார் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் நீண்ட காலமாக விசாரணைக்காக காத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம், காணிப் பிரச்சினைகள் மற்றும் முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படுகின்றமை போன்ற பல்வேறு விடயங்கள் கு[illegible]தும் இந்த பிரதிநிதிகள் அசோ[illegible] கே.காந்தாவுடன கலந்துரையாட[illegible]யுள்ளனர்.

# வெளிநாட்டு புலிகளுக்கு சிங்களவர்களும் உதவி

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு



(கொழும்பு)

வகுப்புவாத தன்மையைக் கொண்டுள்ள சில சிங்களவர்கள், வகுப்புவாத கொள்கைகளைக் கொண்டுள்ள வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு உதவுவதாக அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சாட்டியுள்ளார். ஹலியல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

தற்போது, வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள், தனிநாடொன்றை உருவாக்கும் நோக்கில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும். அவர்களுக்கு சில சிங்களவர்களும் உதவுவதாக அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களை கொலை செய்துள்ளது. இதற்கு மேல் நான் எதனையும் கூறவிரும்பவில்லை. ஏனெனில் அப்படி நான் கூறும் பட்சத்தில், ஒழுக்காற்று விசாரணைக்கு நான் உட்பட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா தனது உரையில தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் ஆயுதங்கள் இருப்பதாக வவுனியா விசேட பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள கிணறொன்றில் இருந்து ஆயுதங்களை மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை புதுக்குடியிருப்பில் தேடுதலை நடத்திய வவுனியா பொலிஸார், கிணற்றில் இருந்து விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட வெடிபொருட்கள் உட்பட பல ஆயுதங்களையும் மீட்டிருந்தனர்.

இதேவேளை அப்பகுதியில் உள்ள பதுங்கு குழி ஒன்றில் இருந்தும் ஆயுதங்களை மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸின் விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

# ‘லங்கா மகாபொல’ டேபனில் தடுப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஒரேயொரு சரக்குக் கப்பலான ‘லங்கா மகாபொல’ தென்னாபிரிக்காவின் டேபன் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கப்பல் மாலுமிகளுக்கு சம்பளங்கள் வழங்கப்படாமையே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் நீதிமன்ற உத்தரவின்படி கடந்த 17 ஆம் திகதி முதல் இந்தக் கப்பல் டேபன் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் 26 இலங்கையர்களும் இரண்டு உக்[illegible]யன் நாட்டினரும் பணியாற்றுகின்றனர்.

எனினும் இந்தக் கப்பலின் மாலுமிகளுக்கு சம்பளம் வழங்க வேண்டியது கப்பலை வாடகைக்கு பெற்றுள்ள இரண்டு நிறுவனங்களின் பொறுப்பு என்பதால் அதில் தலையிட முடியாது என்று இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# இடைநிறுத்தம்

பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டு வந்த தொழிற்சங்க நடவடிக்கை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கொடுப்பனவு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணி நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகள் குறித்து நிதி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் பணிநிறுத்தத்தை தற்காலிகமாகக் கைவிட தீர்மானித்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சேனரத் பண்டார தெரிவித்தார்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போது தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் பணிநிறுத்தம் தொடரப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஓடும் ரயில் முன் பாய்ந்து மாணவ ஜோடி தற்கொலை

தியதலாவ பகுதியில் பாடசாலை மாணவனும், மாணவியொருவரும் ஓடும் ரயிலின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கண்டியில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த சரக்கு ரயிலின் முன்னால் நேற்று நண்பகல் குறித்த இருவரும் பாய்ந்துள்ளனர் என நானுஓயா ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்தது. தியதலாவை பகுதியை சேர்ந்த 18 வயதான மாணவனும் 16 வயதான மாணவியுமே இவ்வாறு தற்கொலை செய்[illegible] கொண்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தியதலாவ வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. காதல் விவகாரம் காரணமாக இவர்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என சந்தேகிக்கும் தியதலாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேருந்து விபத்துக்களை தடுக்க செயற்திட்டம்

(கொழும்பு)



நாட்டில் அதிகரித்துவரும் பேருந்து விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் புதிய தொழிற்திட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்க செயலாளர் கெமுனு விஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பேருந்து விபத்துக்கள் அதிகரிப்பதற்கு பேருந்துகளுக்கு இடையில் காணப்படுகின்ற போட்டித் தன்மையே காரணம் எனவும், பேருந்து சேவை தொடர்பில் முறையான நேர அட்டவணை ஒன்று இல்லாமை இவ்வாறான போட்டித் தன்மையை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், சரியான நேர அட்டவணை ஒன்று உருவாக்கப்படும் போது, இந்த விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விபத்துக்களை தவிர்ப்பது குறித்து பயணிகள், பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான விசேட பயிற்சி ஒன்று நேற்றைய தினம் நுவரெலியாவில் ஆரம்பமாகியுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இந்த விசேட பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

பேருந்துக்களில் இடம்பெறும விபத்துக்கள் காரணமாக இந்த வருடத்தில் மட்டும் 8 சதவீதமான பயணிகள் பேருந்துக்களை தவிர்ப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தடுக்கும் நோக்கிலேயே சாரதிகளுக்கும் நடந்துனர்களுக்கும் இந்த விசேட பயிற்சி வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம் - கொழும்பு பிரபல ஆசிரியர்களின் 2012 உயர்தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்**

02.06.2012 சனிக்கிழமை முதல்
தினமுரசு நாளிதழின்
கல்வி முரசில் வெளிவருகின்றது

மாணவர்களின் சந்தேகங்களை உரிய பாட
ஆசிரியர்களுடன் தொலைபேசியில்
கலந்துரையாடி தீர்வுகாணும் வசதி.

வாரம் தோறும் செவ்வாய், சனி, ஞாயிறு
ஆகிய 3 தினங்களில் தினமுரசு
நாளிதழில் வெளிவரும்.

உயர்தர மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றினை
உயர்த்த தினமுரசின் பங்களிப்பு!
உங்களின் உயர்பெறுபேறு எங்களின் திருப்தி!
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தினமுரசு

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.